
விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, சித்திரை 4 உ புதன் 16-4 69 முஹர்ரம் 28 புந்தகம் 23 இதழ் 25




# 'ஆட்சியை வீழ்த்த தமிழரசு தயார்'

## பொதுச் செயலாளர் அறிவிப்பு

"தமிழினத்தின் விரோதியான கல்வி மந்திரி இர்யகொல்லே மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை ஆதரித்து நாம் வாக்களிக்காதது ஏன் என்று பலர் கேட்டார்கள். நாம் அன்று ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருந்தோம். அரசாங்கத்துக்கு ஆதரவு தர ஒப்புக் கொண்டிருந்தோம். எனவே கொடுத்த வாக்கை மீறி நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்து அரசாங்கத்துக்கு சங்கடமேற்படுத்துவது நேர்மையற்றது என்று கருதினேம்.

"ஆனல் இன்று நமது கட்டுக்கள் அறுக்கப்பட்டு விட்டன. சுதந்திரப் பறவையாகி விட்டோம். எதிர்க்கட்சியில் இருந்து எமது இஷ்டப்படி இயங்குவோம். இனிமேல் கல்வி மந்திரி மீது மட்டுமல்ல இந்த அரசாங்கத்தின் மீதே நம்பிக்கையில்லாத்தீர்மானம் கொண்டு வரப்பட்டால் கூட, அதை ஆதரித்து வாக்களிப்போம்.—அரசாங்கத்தை எதிர்ப்போம்!"

—இவ்வாறு யாழ். கோட்டை மைதானத்தில் இம்மாதம் 9ந் திகதி இரவு வெள்ளம்போல திரண்டு நின்ற அரை இலட்சம் மக்கள் மத்தியில் வட்டுக்கோட்டை பா. உ. திரு. அமிர்தலிங்கம் கர்ஜித்தார். (முழுப் பேச்சு விபரம் உள்ளே)

## 'சிங்களம் மட்டும் கொள்கையை தமிழரசுக் கட்சி மாற்றிவிட்டது'



பட்டொளி வீசிப் பறக்கும் தமிழரசுக் கட்சியின் மூவண்ணக் கொடியை ஏற்றிவைக்கிறர் கட்சியின் முன்னைய தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன்.


சிங்களம் மட்டும் மொழிக் கொள்கையை தமிழரசுக்கட்சிக்குப் பயந்து யூ. என். பி. நிர்வாக ரீதியாக மாற்றி அமைத்து விட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனிச் சிங்களச் சட்டத்தை அமுல் நடத்த முடியாத நிலையை தமிழரசுக்கட்சி ஏற்படுத்தி விட்டது.,' — இவ்வாறு சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா, றக்குவானை யில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

திருமதி சிறிமா மேலும் கூறியிருப்பதாவது:-

'சிங்களம்அரசாங்கமொழியாக ஏழுமாகாணங்களில் மாத்திரமே செயல்பட்டு வருகிறது. ஆனல் தமிழ், நாடு பூராவும் செயல்பட்டு அரசாங்க மொழியின் இடத்தைப் பிடித்து வருகிறது. தமிழரசுக்கட்சி அரசாங்கத்துள் இருந்துகொண்டே யூ. என். பி. யை பயமுறுத்தி தனிச் சிங்கள சட்டத்தை அமுல் நடத்தாது தடுத்து நிறுத்தி விட்டது.

(9ம் பக்கம் பார்க்க)

## மாநாட்டுக் காட்சிகள்



மேலே: தமிழரசு மாநாட்டையொட்டி இணுவிலில் நடைபெற்ற கைத்தொழில் கமத்தொழில் கண்காட்சியை தமிழரசுத் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் திறந்து வைத்து பார்வையிடுகிறர். தந்தைக்கு இருமருங்கிலும் திருவாளர்கள் அமிர்தலிங்கமும் இராசதுரையும் காணப்படுகின்றனர்.

கீழே: மாநாட்டின்போது வரவேற்புக் குழுத் தலைவராக பணியாற்றிய உடுவில் எம். பி. வி. தர்மலிங்கம், கா. பொ. இரத்தினம், கட்சித் தலைவர் இராசமாணிக்கம், பொதுச்செயலாளர் அமிர்தலிங்கம் ஆகியோர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே நீ போனாலும் அங்கே உன்னைத் தேடு!

பா. பாலேஸ்வரி

## அத்தியாயம் (14)

ரகு தன் வாழ்க்கையில் எத்தனையோ மரணங்களைப் பார்த்திருக்கிறான். பல மரணச்சடங்குளில் பங்குபற்றியிருக்கிறான். அப்பொதெல்லாம் தன் மனதில் ஏற்படாத சோகம்-ஒரு கலக்கம் அன்று அந்த அவல ஒலத்தைக் கேட்டபோது அவனுக்கு ஏற்பட்டது. அது எதனால் என்பதுதான் இன்னும் அவனுக்குப் புரியாத புதிராகஇருந்தது. நோய்வாய்ப் பட்டு ஆபத்தான குழந்தை அவனுக்கு அறிமுமானதாக இருசகவேண்டும் அல்லது அதன் பெற்றோர் அவனுக்கு உறவாக இருக்கவேண்டும். ஆனால் இரண்டும் கெட்ட நிலையில் யாரோ முன்பின் அறிமுகமற்ற பெண்ணொருத்தி அழுதால் அவன் மனம் எதற்காகக் குழம்ப வேண்டும். ஒருவேளை அவனது மனநிலை அதற்குக் காரணமாக இருக்கலாமா.....? ஆமாம்! பவானியின் எதிர்பாராத வருத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த அவன் மனம் எந்த ஒரு துன்பத்தையும் சகித்துக் கொள்ள முடியாத நிலையில் இருந்ததே அதற்குக் காரணமாயிருந்தது.

'ஐயோ டாக்டர்' என்று அலறிய பெண்ணின் குரல் இப்போது உச்சஸ்தாயியில் ஒப்பாரிவைத்து அலற அந்தப் பெண் தன் குழந்தை அநுமதிக்கப்பட்டிருந்த அறையை நோக்கி ஓடினாள். ரகுவுக்கு அவள் ஏன் ஓடுகிறாள் என்பது யாரும் கூறாமலே புரிந்தது. அவள் தலையில் அடித்துக் கொண்டு ஓட அவளைப் பின் தொடர்ந்து அந்தக் கூட்டமும் ஓடியது. குழந்தை மரணத்தின் வாயில் அகப்பட்டுவிட்டது என்பது இப்போது தெளிவாகியது. அவன் டாக்டரைத் தேடிப்போனான். டாக்டர் அதற்குள் வீட்டுக்குப் போய் விட்டதாகச் செய்திகிடைத்தது. அவனும் அதைத்தான் எதிர்பார்த்திருந்தான்.

அவனும் அந்த வைத்திய சாலைக்கு வேலையில் சேர்ந்து நான்கு மாதங்கள் முடியப் போகின்றன. டாக்டருடன் பழகிய அவனுக்குநான்குமாத அநுபவமுண்டு. இதற்கு முன்பு கூட வைத்தியசாலையில் அநுமதிக்கப்பட்டு யாராவது துரதிர்ஷ்டவசமாக இறந்துபோக நேர்ந்தால் டாக்டர் ராஜனால் அதைத் தாங்கிக் கொள்ள முடிவதில்லை என்பதை அவன் கண்கூடாகக் கண்டிருக்கிறான். ஏதாவது கேஸ் தவறினால் அடுத்த நிமிடம் டாக்டரை டிஸ்பென்ஸரியில் காண முடியாது. அவர் வீட்டுக்குப் போய்விடுவார். திரும்பவும் அவர் டிஸ்பென்ஸர்க்கு வர அரைமணி அல்லது ஒரு மணிநேரஞ்செல்லும் தன்னைப் போல. அவருக்கும் மிகவும் இளகிய உள்ளம் என்று நினைத்துக் கொள்வான் அவன்.

அன்றும் அப்படித்தான் டாக்டர் சென்றது அவனுக்கொன்றும் ஆச்சரியமாக இருக்கவில்லை. அதனால் அவன் அங்கு நின்ற தாதிமார்களில் தனக்குப் பழக்கமானவளைப் பார்த்து குழந்தைக்கு எப்படி என்று வேண்டுமென்றே கேட்டான். ''என்ன ராமு......... உனக்குத் தெரியவில்லை. குழந்தையின் ஆயுள் முடிந்துவிட்டது. சிறிது முந்திக் கொண்டு வந்திருந்தால் காப்பாற்றியிருக்கலாம்...... என்னமோ விதி அவ்வளவு தான்! என்று அவள் அலுத்துக் கொண்டபோது அவனுக்கு அழவேண்டும்போல இருந்தது. அதேசமயம் அவனால் பவானியையும் நினைக்காமல் இருக்க முடியவில்லை. கொஞ்சம் பிந்தியிருந்தால் உயிருக்கே ஆபத்து வந்திருக்கும் என்று டாக்டரும் தாதியும் கூறியது அவன் ஞாபகத்திற்கு வந்தபோது அதிர்ஷ்டம்இன்னும் தன்பக்கம் இருப்பதாக அவன் தன்னைத் தேற்றிக் கொண்டான்.

எப்படியோ ஒருவாரஞ் சென்றுவிட்டது. பவானி எழும்பி நடக்கும் நிலையை அடைந்துவிட்டாள். ரகு ஓய்வு நேரங்களில் அவளுடன் பேசிக் கொண்டிருப்பதிலேயே காலத்தைக் கழித்து வந்தான். இந்த இடைக்காலத்தல் டிஸ்பென்ஸரிக்கு ஒரு புதிய தாதியும் நியமனமாகியிருந்தாள் என்று பேச்சுப் போக்கில் தன் தங்கச்சிகூறக் கேள்விப்பட்டிருந்தானே தவிர அவளை அவன் இதுவரை காணவில்லை. காண முயற்சிக்கவுமில்லை. இந்த நாலு மாதங்களில் டிஸ்பென்ஸரியில் என்ன நடக்கின்றதென்றே அவனுக்குத் தெரியாது. அதைப்பற்றி அவன் கவலைப்பட்டதாகவுந் தெரியவில்லை. அதனாற்தான் புதிய தாதி வந்தது கூட அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. பாவானியை அங்கு அநுமதித்திருக்கா விட்டால் டிஸ்பென்ஸரித் திண்ணையிற் கூட அவன் கால் வைத்திருக்க மாட்டான்.

வழக்கம் போல அன்றும் அவன் பவானியோடு பேசிக் கொண்டிருந்தான். அப்போது அந்தத் தாதி பவானியைப் பார்வையிடுவதற்காக உள்ளே நுழைந்தாள். அவளைப்பார்த்ததும் அவள்தான் புதியவளாக இருக்கவேண்டும் என ரகு ஊகித்துக் கொண்டான். அவளை அவன் இதற்குமுன் பார்த்ததில்லை. மற்றைய தாதிகளில் சிலர் அவனோடு அன்பு பாராட்டி உரிமையுடன் பழகும்போது அவனும் அவர்களுடன் ஒரு சகோதரனுக்குரிய அன்புடன் பழகுவான். பேசாதவர்களோடு அவனும் பேசிக் கொள்ளமாட்டான். வலியச் சென்று யாருடனும் பேசிக் கொள்ளும் வழக்கந்தான் அவனிடங் கிடையாதாச்சே. 'எக்ஸ்கியூஸ் மீ...' நர்ஸ் அவனிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு பவானியின் அருகிற் சென்று அவள் உஷ்ணத்தைப் பரீட்சிக்கத் தொடங்கினாள். அபோது அவள் விழிகள் ரகுவின் மீது பதிந்து தாழ்ந்தன. தூரத்திற் சென்று நின்ற ரகுவும் அதேசமயம் அவளைப் பார்க்க நேர்ந்ததால் இருவர் கண்களும் ஒருமுறை சந்தித்துக் கொண்டன.

'இவர் தான் என் அண்ணா மிஸி... ராமு அண்ணா என்று கூறினேனே அவர் தான் இவர்... என்மீது ரொம்பப் பிரியம்...'

பவானி ரகுவை அவளுக்கு அறிமுகஞ் செய்து வைக்க அவள் மகிழ்ச்சியோடு ரகுவை இரண்டாம் முறை பார்த்தாள். மரியாதைக்காக ரகுவும் அவளைப் பார்த்து ஒரு புன்னகையை உதிர்த்து விட்டுத் தன் பார்வையை வேறுபக்கந் திருப்பிக் கொண்டான்.

பவானி மீது அவனுக்குத் கோபங் கோபமாக வந்தது. எதற்காக இவளுக்கு என்னை அறிமுகஞ் செய்ய வேண்டும் என்று கர்விக் கொண்டவன் அந்தத்தாதி போகும்வரை காத்திருந்தான். இதற்கு முன்பும் அவன் அவளோடு பேசிக் கொண்டிருந்த சமயங்களில் வேறு தாதிமார் பவானியை பரீட்சிக்க வந்திருக்கிறார்கள். அவர்கள் அவனோடு ஏதாவது குறும்பாகப் பேசிக் கொண்டே ஐந்து நிமிடத்தில் தங்கள் வேலையை முடித்துக் கொண்டு போய் வடுவார்கள். ஆனால் இவள் ஆமாம் இவள்! அவனுடன் ஒரு வார்த்தை பேசவும் இல்லை. வேலை முடிந்தவுடன் போகவும் இல்லை.

பவானியுடன் சில நிமிடம் ஏதோ அரட்டை அடித்து விட்டு பின்புற ஜன்னற் பக்கஞ் சென்று சிறிது நேரம் வெளியுலகைப் பார்த்துக் கொண்டிருந்தான் ரகுவுக்கு அவள் மேல ஆத்திரம் வந்தது. தான் ஒரு தாதி என்ற கர்வத்தைக் காட்டுகிறாள் போலும் என்று அவள் அந்த அறையை விட்டுப் போகும் வரை அவனும் வெளியே சென்று காத்து நின்றான்.

நமது தொடர்கதை

அவள் வெளியே செல்லும் பூட்ஸ் சத்தங் கேட்ட பின்புதான் அவன் உள்ளே சென்றான் " இதுதான் புதிதாக வந்த தாதி அண்ணா...பெயர் நிர்மலா ரொம்ப நல்லவள்... இன்றைக்கு இவள்தான் நயிட் டியூட்டியாம்' என்று பவானி அவனிடங் கூறியதற்கு ''உனக்கு யாரைத்தான் பிடிக்காது... அது சரி எதற்காக நீ என்னை அவளுக்கு அறிமுகப்படுத்தினாய்...? எனக்கிதெல்லாம் கொஞ்சமும் பிடிக்காது தங்கச்சி...'' என்று அவன் சற்றுக் கண்டிப்புடன் சொல்ல பவானி சிரித்தாள். இதென்னண்ணா நீங்கள்... படிக்காத ஆள்மாதிரி... உங்களை அறிமுகஞ் செய்ததில் என்ன தவறு... என்னண்ணைவைப் பற்றி நான் எப்படிச் சொன்னால் என்ன...? என்றுபவானி திருப்பிச் சொன்னபோது ரகுவால் சிரிக்கத்தான் முடிந்தது.

பவானியின் மனம் நோகக் கூடியதாக அவனால் எதுவுமே செய்ய முடியாது. அதனால் அவன் சிரித்து சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு குறிக்கப்பட்ட நேரம் வந்ததும் பவானியிடம் விடைபெற்று வெளியேறினான். அவன் வெளியேறியபோது எதிரே வந்து கொண்டிருந்த நர்ஸ் நிர்மலா அவனைப் பார்த்து முறுவலித்தாள். அவன் அவளைக் கவனிக்காதவன் போல் நேராக நடந்து சென்றுவிட்டான். அவளைப் பார்க்கவோ அவளோடு பேசவோ அவன் பயப்பட்டான். அவளைப் பார்த்தது முதல் அவனுக்கு ஒரு மனப் பயம் உண்டாகியிருந்தது.

[illegible] மல்ல, மேக்கப் போட்டால் அசல் கே. ஆர். விஜயா தான். மேக் அப் இல்லாமல் விஜயாவைவிட சற்றுப் பொன்னிறமானவள். அதனாற்தான் அவனுக்கு அப்படி ஒரு பயம் ஏறபட்டது.

சிலரைப் பார்க்கும்போது முதற் பார்வையிலேயே பிடித்துவிடும். அவர்களிடம் ஏதோ ஒரு கவர்ச்சியிருக்கும். சிலரை முதற்தரம் பார்க்கும் போதே ஒரு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டு விடும். அதை அவன் அனுபவ மூலமாக அறிந்திருந்தான் நிர்மலாவைக் கண்ட போதும் அவளை அவனுக்கு ரொமபப் பிடித்துவிட்டிருந்தது. அதனாற்தான் இரண்டாம்முறை அவளை அவன் பார்க்க விரும்பவில்லை. ஆசைக்கு ஒரு தங்கையும் அன்புக்கு ஒரு காதலியும் இருக்கும்போது மூன்றாவது பெண்ணொருத்தியிடம் எதற்காக அன்பு செலுத்தவேண்டும் என்றுதான் அவளைத் தட்டிக் கழிக்க முயன்றான்.

ஆனால் மனிதன் நினைத்தபடி என்னதான் நடந்துவிடுகிறது...? எந்த ஒரு பொருளை அடைய விருப்புகிறோமோ அது எம்மை விட்டுத் தூர விலகிப் போவதையும் எதை விலக்கித்தள்ள முயற்சிக்கிறோமோ அது எம்மை நெருங்கி நெருங்கி வருவதையும் வாழ்க்கையில் பலமுறை கண்டிருக்கிறோம். ரகுவின் வாழ்க்கையிலும் அப்படித்தான் ஒன்று நடந்தது.

ஆரம்பத்தில் காவற்காரனாக அமர்த்தப்பட்ட அவன் காலப் போக்கில் டாக்டரின் அந்தரங்கக் காரியதரிசி போலானான். அவனுக்கென்றொரு தனிவேலை இருக்கவில்லை அநேகமாக அவன் டிஸ்பென்ஸரியோடு சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளையும் பழகிவிட்டான் என்றே கூறவேண்டும். அதனால் யாராவது வேலைக்கு வராத நாட்களில் டாக்டர் அவனை அந்த வேலைக்குத் தற்காலிகமாக நியமிப்பார். இப்போது வேறோர் காவற்காரன் அங்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருந்தான்.

ஆனால் ரகுவின் துரதிர்ஷ்டம் அன்று அந்தக் காவற்காரன் வராததால் அவன் வரும்வரை டாக்டர் அவனையே காவற்காரனாக நியமித்திருந்தார். அத்துடன் இரவு டியூட்டி பார்க்கும் நர்ஸுக்கும் வேண்டிய ஒத்தாசை செய்து கொடுக்கவேண்டும் என்பது டாக்டரின் கட்டளையாக இருந்தது. அவனுக்குப் பழக்கமான மிஸி யாராவதாவது இருக்கலாம் என்று தான் அவன் தடை சொல்லாமல் டாக்டரின் கட்டளையை ஏற்றுக் கொண்டான். ஆனால் இப்பொழுது அது அவனுக்கு ஒரு பிரச்சினையாக இருந்தது.

அவன் பக்கத்துக் கடைக்குச் சென்று சாப்பிட்டு விட்டு வாயிற்படியருகே ஒரு நாற்காலியைப் போட்டு அமர்ந்து கொண்டான். அன்றையப் பொழுதைப் போக்கவும் நித்திரை தூங்காமல இருப்பதற்காகவும தனக்குப் பிடித்தமான ஆங்கில நாவலாசிரியையான 'பாபரா கார்ட்லான்ட்' என்பவரின் 'லவ் இன் ஹைடிங்' மறைவில் காதல் என்ற புத்தகத்தையும் கையோடு கொண்டு வந்திருந்தான். அதை முன்பு ஒரு முறை படித்திருக்கிறான். அதை எத்தனை முறை படித்தாலும் அவனுக்கு அலுப்பதில்லை. அந்த நாவலாசிரியையின் எந்தப் புத்தகத்தை எடுத்தாலும் அவன் பலமுறை படிப்பான். வாசகர்களைப் பாத்திரங்களுடன் ஒன்றிப்போக வைக்கும் படைப்புகள் அவை. வழக்கம் போல பவானி படுத்திருந்த அறைப் பக்கம் வரை சென்று வெளியே நின்று பார்வையிட்டு விட்டு மீண்டுந்தன் இருப்பிடத்திற்குச் சென்று புத்தகம் படிக்கத் தொடங்கினான்.

அப்போது யார் நீங்களா.....?நீங்கள்கூட இங்கே தானே வேலைபார்க்கிறீர்கள்? எனக்கு பவானி சொன்னாள். இங்கு பல நாட்களாக வேலை செய்கிறீர்களாக்கும்...?நான் இங்கு வேலையேற்று மூன்று நாட்கள்தான் ஆகிறது ஆயினும் எனக்கு இந்த டிஸ்பென்ஸரியும்டாக்டரும் ரொம்பப் பிடித்துள்ளனர். உங்களுக்கு நாவல்கள் என்றால் பிடிக்குமாக்கும்...? எங்கே அந்தப் புத்தகத்தைக் கொஞ்சம் பார்க்கலாமா......?' என்ற குரல் கேட்டது.

அந்தக் குரலைக் கவனிக்காதவன் போல் புத்தகத்தையே பார்த்துக் கொண்டு அவள் குரலுக்கு மட்டும் காதைக் கொடுத்துக் கொண்டிருந்த அவன் தன் கையில் இருந்த புத்தகத்தை அவளிடம் நீட்டினான். ஆனால் தன் பார்வையை மட்டும் வேறுபக்கந் திருப்பிக் கொண்டான். அவனைப் பார்த்தபடியே புத்தகத்தைப் பெற்றுக் கொண்டு ''ஓ பாபரா கார்ட்லாண்டின் புத்தகமாக்கும்! எனக்கும் ரொம்பப் பிடித்தமான ஆசிரியை. ஆங்கில நாவல்கள் உங்களுக்கு அதிகம் பிடிக்குமாக்கும்...?''

அவள் கேள்வி அவனுக்குச் சினமாக இருந்திருக்க வேண்டும். 'பிடிக்கும்' என்று மட்டும் சுருக்கமாக பதிலளித்தான். அவள் புத்தகத்தை அவனிடம் நீட்டினாள். ஆனால் அவன் தன் பார்வையைவேறெங்கோசெலுத்திக் கொண்டிருந்ததால் அவள் புத்தகம் நீட்டியதைக் காணவில்லை. 'உங்கள் புத்தகம்' என்று அவள் குரல் கொடுத்த பின்புதான் அவன் தன் கையை நீட்டிப் புத்தகத்தைப் பெற்றுக்கொண்டான்.

அதன் பின்பு கேட்ட சப்பாத்துச் சத்தத்தில் இருந்து அவள் அவ்விடத்தை விட்டுப் போய் விட்டாள் என்பது அவனுக்குப் புலனாகியது. கையில் புத்தகத்தை வைத்துக் கொண்டு அவள் போவதையே பார்த்து நின்றான் அவன். அவளுக்காக அவன் உள்ளம் முதற்தடவையாக ஏங்கிக் கொண்டது. அவளை உதாசீனஞ் செய்து விட்டோமோ என்ற பயமும் கூடவே எழுந்தது. பவானியையும் பார்வையிடுபவளாக அவள் இருந்தபடியால் அவளுடன் சமாதானமாக நடந்து கொள்ள வேண்டும் என நினைத்துக் கொண்டான். அதனாற் கையில் இருந்த புத்தகத்தை மூடி விட்டு அவன் சிறிது நேரம் தெருவாயிலுக்கும் உள்ளுக்குமாக நடந்தான்.

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தம், வியர்வை, கண்ணீர் சிந்துவதற்கு தயாராவீர்!

"கடந்த 4 ஆண்டுகள் கட்டுப்பட்டிருந்தோம். கட்டுண்டோம் பொறுத்திருந்தோம். காலம் மாறும் மாறும் என்று காத்திருந்தோம். 16 ஆண்டுகள் எதிர்க்கட்சியிலிருந்தோம். 65ம் ஆண்டு ஆளும் கட்சியில் அங்கமாக அமையக்கூடிய நிலை ஏற்பட்டது. 16 ஆண்டுகள் எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்தை முழு மூச்சாக எதிர்த்தோம். அடிபட்டோம் உதைபட்டோம். சிறைசென்றோம். தடுப்புக்காவலில் வதைக்கப்பட்டோம். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக பலர் உயிர்களைக்கூட தியாகம் செய்தார்கள். மீண்டும் நாம் பழைய நிலைக்கு வந்துவிட்டோம். போராட்டத்திற்கு தயாராகுங்கள். அழைப்பு வரும்போது அணி அணியாக வாருங்கள்.



## வீரத் தமிழ் இளைஞர்களை அறைகூவி அழைக்கிறார் தளபதி

—யாழ். கோட்டை மைதானத்தில் இம் மாதம் 9ம் திகதி இரவு பொங்குமா கடலெனத் திரண்ட மக்கள் மத்தியில் வீர அழைப்பு விடுத்தார் தமிழரசுப் பொதுச் செயலாளர் தளபதி அமிர்தலிங்கம்.

30,000 பேருக்குமேல் அலை கடலெனத் திரண்டு, குமுறும் இன உணர்வுடன் குழுமியிருந்த இக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் பேசும் போது தமிழுரிமைப்போரில் குதிக்க வீட்டுக்கொரு வாலிபர் முன்வர வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

திரு. அமிர்தலிங்கம் பா. உ. மேலும் தமது வீரவுரையில் கூறியதாவது:-

"இந்தியாவில் சுதந்திரத்திற்காக போராடி வந்த தேசிய காங்கிரஸ், சில கட்டங்களில் மந்திரி சபையையும் அமைத்தார்கள். சென்னையில் ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் மந்திரி சபை பதவி ஏற்றது. இதேபோல் வேறு சில இடங்களிலும் காங்கிரஸ் மந்திரி சபை அமைத்தது 39ம் ஆண்டு போர் தொடங்கிய நேரத்தில், வெள்ளையர்கள் போர் பிரகடனம் செய்ததை எதிர்த்து, காங்கிரஸார் பதவிகளை உதறித் தள்ளிவிட்டு மீண்டும் சுதந்திரப் போராட்டத்தில் குதித்தார்கள். இதே போல் உரிமைக்காகப் போராடி வந்த தமிழரசுக் கட்சியும், தேசிய அரசாங்கத்தில் மந்திரி பதவியை ஏற்று உரிமைகள் கிடைக்கவில்லையென்று தெரிந்ததும், மீண்டும் போராட்டத்தில் குதித்துள்ளது.

சில உரிமைகளைப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் நான்கு ஆண்டுகள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தோம். எத்தனையோ தடவை எமது இனத்திற்கு இன்னல் நேர்ந்த போதெல்லாம், பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் எதிர்த்து வாதாடினோம். போராடினோம். வெளியில் மௌனம் சாதித்து வந்தோம்.

நான்கு ஆண்டுகள் நாங்கள் என்ன செய்தோம் என்று இன்று பலர் கேட்கிறார்கள். ஏன் வெளியேறவில்லை என்று கடந்த 4 ஆண்டுகளாக கேட்டார்கள். இன்று ஏன் வெளியேறினீர்கள்? என்றுகூட சிலர் கேட்கிறார்கள். இதற்கெல்லாம்பதில் சொல்லிக்கொண்டிருப்பதில் காலத்தை கடத்தாது நாம் நமது போராட்டத்தை தொடங்கவேண்டும்.

தமிழ்மொழி உபயோக சட்டவிதிகள் சட்டபூர்வமான அந்தஸ்து பெற்றுள்ளன. திறைசேரி சுற்றறிக்கைமூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களத்துடன் தமிழுக்கும் சட்டபூர்வமாக சம அந்தஸ்து கிடைத்துள்ளது. வடக்கு கிழக்கில் எந்த விஷயமும், தமிழ் மொழியிலும் வெளியிடப்படவேண்டும் என திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக நாம் இது போன்ற இன்னும் சில உரிமைகளை அரசாங்கத்திடமிருந்து பெற்றிருக்கிறோம்.

### ஏன் வெளியேறாமல் இருந்தோம்

மாவட்டசபை இல்லை என்று தெரிந்ததும் ஏன் அரசாங்கத்திலிருந்து வெளியேறவில்லை என்று சிலர் கேட்கின்றார்கள். அதன் பின்பும், நாம் பிரதமருடன் செய்த ஒப்பந்தத்தில் சிலவற்றையாவது அமுல் செய்யலாம் என்ற நம்பிக்கையில் தான் வெளியேறவில்லை.

தமிழ் பல்கலைக் கழகம் வேண்டுமென்று பிரதமரிடம் கேட்டோம். தமிழ் காங்கிரஸ் கட்சியினர் இந்தப் பல்கலைக்கழகம் கேட்கின்ற நிலையில் எப்படி இரு பல்கலைக்கழகம் வழங்க முடியும் என்று பிரதமர் கூறினார்;

மாவட்டசபை இல்லை என்று தெரிந்த பின்னர், பிரதமர் திருமலையில் ஒரு பொதுப் பல்கலைக் கழகம் நிறுவித் தருவதாக வாக்குறுதியளித்தார். ஆனால் அதுகூட இன்று கைவிரிக்கப் பட்டுவிட்டது. இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் நாம் நம்பி ஏமாந்தோம். எங்கள் தொகுதி அபிவிருத்தியில் கூட அரசாங்கம் அக்கறை காட்டவில்லை.

### மாவட்டசபை

மாவட்டசபை கிடைத்திருந்தால் தமிழ[illegible]வது தங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். தெற்கில் எதிர்க்கட்சியினரும், வடக்கில் தமிழ் காங்கிரஸாரும் பலத்த எதிர்ப்புக் காட்டியதால் பிரதமர் மாவட்டசபையும் கைவிட்டார்.

தேசிய அரசாங்கத்திலுள்ள கட்சித் தலைவர்கள், பிரதமர் தலைமையில் மாவட்டசபை மசோதாவை ஆராய்ந்தனர். மக்கள்பிரதிநிதியே மாவட்டசபை தலைவராக இருக்க வேண்டும் என்று நாங்கள் கூறியதை பிரதமரே ஏற்றிருந்தார். தமிழ் காங்கிரஸ் தலைவர் மாவட்டசபை தலைவராக, மக்கள் பிரதிநிதி இருக்கக் கூடாதென்றும், அரசாங்க அதிபரே மாவட்டசபை தலைவராக இருக்க வேண்டும் என்று ஒரு திருத்தத்தை கொண்டு வந்தார். இதனை மற்றும் கட்சித் தலைவர்களும் ஆதரித்தனர் மாவட்டசபை வரவேண்டும் என்பது தான் எங்கள் ஒரேஒருநோக்கம். அதனால் அவர் கூறிய திருத்தத்தை ஏற்றுக்கொண்டோம். அதன் பின்பும், மாவட்டசபை மசோதாவில், பல திருத்தங்களை தமிழ் காங்கிரஸ் தலைவர் கொண்டு வந்து, மாவட்ட சபைகளின் அதிகாரங்களை குறைத்துக் கொண்டு வந்தார். எல்லாத் திருத்தங்களுக்கும் நாம் சம்மதித்தோம்.

அதிகாரங்கள் குறைந்த மாவட்ட சபைகளைக் கூட நாம் அந்த நேரத்தில் ஏற்றுக்கொள்ள தயாராக இருந்[illegible] சபைகள் [illegible] நிறுவப்பட்ட பின்னர் படிப்படியாக அதிகாரங்களை மீண்டும் கூட்டலாம் என நாம் கருதினோம். மாவட்டசபை மசோதா எதிர்ப்பு நாட்டில் அதிகரிக்கவே பிரதமர் மாவட்டசபைகள் நிறுவும் எண்ணத்தைக் கைவிட்டார்.

தமிழ் மொழியை அழித்து வரும் சிங்கள கட்சிகள் தமிழரின் கலை, கலாச்சாரத்தை அழிக்கத் திட்டம் தீட்டியுள்ளன. சினிமா கலை நவீன சாதனம் என்பதை உலகமே இன்று ஏற்றுள்ளது. தமிழ்ப் படங்களில் 3 பிரதிகளே எடுக்கலாம் என அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதனால் இந்நாட்டில் எத்தனையோ படமாளிகைகளில் தமிழ்ப்படங்கள் ஓடமுடியாத நிலைமை ஏற்படும். தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள படமாளிகைகளில், சிங்களப்படங்களைத் திரையிடுவார்கள். இந்த நிலை நீடித்துக் கொண்டிருந்தால், இன்னும் சில ஆண்டுகளில் இந்நாட்டில் வாழும் தமிழர் புதிய இனமாக புதியமொழி பேசுபவர்களாக மாறுவார்கள். இதற்காகவே அரசாங்கம் திட்டம் தீட்டி வருகிறது. இதனை நாம் முழுமூச்சாக எதிர்க்க வேண்டும்.

எல்லாரும் உரிமைப்போருக்கு ஊக்கமளிக்க முன்வர வேண்டும்.

1956ம் ஆண்டு முதல் 65ம் ஆண்டு வரை பாராளுமன்றத்தில் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்துவந்தோம் 60ம் ஆண்டு தேர்தலின் பின் திருமதி சிறிமாபண்டாரநாயக்க இவ் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாகக் கூறினார். மறுபுறம் டட்லி சேனநாயக்கா நிபந்தனையின்றி எமது ஆதரவை தரவேண்டுமெனக் கூறினார். அந்நேரம் சிறிமாவுக்கு ஆதரவு வழங்கினோம். அதனால் டட்லியின் அரசாங்கம் 35 நாட்களில் வீழ்ந்தது.

அந்நேரம் யூ. என். பிக்கு ஏன் ஆதரவு கொடுக்கவில்லையெனக் மக்களில் பலர் கேட்டனர். அன்று நாம் செய்தது பிழையா?

65ம் ஆண்டு யூ. என். பிக்கு ஆதரவளித்தோம் பிரதமர் டட்லியுடன் ஒப்பந்தம் செய்து ஒத்துழைப்பு வழங்கினோம். 4 ஆண்டுகள் நகர்ந்துவிட்டன. ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி பிரதமருடன் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தினோம். இறுதியில் கண்டது ஏமாற்றம் தான். மாவட்ட சபையை நிறைவேற்றுவோம் என்று கூறினார்கள். ஆனால் கடைசிவரை அதை நிறைவேற்றவில்லை. அதன் பின் தமிழ் பல்கலைக் கழகம் ஒன்று தமிழருக்கு வேண்டுமென்று கேட்டோம்

இலங்கையில் தற்பொழுது 4 சர்வகலாசாலைகள

(9ம் பக்கம் பார்க்க)

## இன விடுதலை போருக்கு வீட்டுக்கொருவாலிபர்வேண்டும்

— பட்டிருப்பு பா. உ.

திரு: இராசமாணிக்கம் தமது பேச்சில் கூறியதாவது:-

உரிமைக்காக போராடும் போது தமிழ் மக்கள் அரசாங்கத்திடமிருந்து சிறு சிறு சலுகைகளை எதிர்பார்ப்பதை விட்டுவிட வேண்டும். அப்படி சலுகைகளை எதிர்பார்த்தால் உரிமைப்போரில் முன்னேற முடியாது. ஆதலால் இன்று முதல் நீங்கள் உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் சிறு சிறு சலுகைகளை பெற்றுத் தரும்படி கோருவதை நிறுத்திவிட வேண்டும். பொது விஷயங்களிலும் தொகுதி முன்னேதிலும் நாங்கள் அரசாங்கத் ற்றத்துடன் வாதாடுவோம். ஆனால் தனிப்பட்ட விஷயங்களில் இனிமேல் தலையிட முடியாது. ஆதலால் நீங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# மீண்டும் ஒத்துழையாமை இயக்கம்!

நாடு முழுவதும் எதிர்பார்த்தபடி உடுவிலில் கூடிய தமிழரசுக் கட்சியின் 11வது மாநில மாநாடு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகளை கடந்தவாரம் எடுத்திருக்கிறது. நான்கு ஆண்டுகளாக அரசாங்கத்துக்கு அளித்து வந்த ஒத்துழைப்பை பூரணமாக வாபஸ் பெறுவதென்றும் எதிர்க்கட்சியாக இயங்குவதென்றும் மாநில மாநாடு ஒரே மனதாக முடிவு செய்துள்ளது. அதாவது மீண்டும் ஒத்துழையாமை இயக்கத்தில் இறங்கி உரிமைப் போராட்டங்களை நடத்துவதற்கு தமிழரசுக்கட்சி தீர்மானித்து விட்டது.

தமிழரசுக்கட்சியின் மாநாடு எடுத்த இம்முடிவை உளம்நிறைந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். இரத்தமும் வியர்வையும் கண்ணீரும் சிந்தி—விடுதலைப் போராட்டங்களை எத்தனை ஆண்டுகளானாலும் தொடர்ந்து நடத்தி—தியாக வேள்வியில் குதிப்பதன் மூலம் தான் தமிழினம் இந்நாட்டில் தனது உரிமைகளை நிலைநாட்ட முடியும் — சுயாட்சித் தமிழரசை ஸ்தாபிக்க முடியும் என்பதே நமது திர்க்கமான கருத்தாகும்.

ஒத்துழையாமை, சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம் போன்ற போராட்ட முறைகள் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்குப் புதியவையல்ல. 1956 ம் ஆண்டு முதல் 1965 மார்ச் வரை தமிழ் பேசும் மக்கள் உறுதியுடன் கடைப்பிடித்து வந்த வழிகள்தான் இவை!

சிங்கள ஏகாதிபத்தியம் இந்த நாட்டுத் தமிழினத்தை கபளீகரம் செய்வதற்கு அசுரத்தனமான நடவடிக்கையிலிறங்கிய நேரத்தில் — தமிழினம் தனது உரிமைகளைப் பாதுகாக்க எந்த வழியில் செல்வதென்று தயங்கித் தவித்த போது — அகிம்சை வழிப் போராட்டத்தின் மூலம்—தியாகத்தின் மூலம் இனவிடுதலையைப் பெற முடியும் என்ற தன்னம்பிக்கையையும் விசுவாசத்தையும் தமிழ் மக்களிடம் ஊட்டி வளர்த்தவர்கள் தமிழரசுக் கட்சியினர் தாம்.

ஒன்பது ஆண்டுகள் கண்ணீரும் செந்நீரும் கரடு முரடும் நிறைந்த புனிதமான போராட்டப் பாதையிலே சற்றும் அலுக்காமல் சளைக்காமல் தமிழரசுக் கட்சியை இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் பின்பற்றி வந்ததைக் கண்டு உலகமே வியந்தது.

இந்நிலையில் 1965 ம் ஆண்டு, தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் ஓர் புதுப்பாதை தோற்றியது. ஒத்துழையாமை இயக்கத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டு ஆட்சியாளருடன் ஒத்துழைப்பதன் மூலம் சில உரிமைகளை நிலைநாட்டக் கூடிய ஓர் அரசியல் சந்தர்ப்பம் தமிழரசுக் கட்சிக்கு வாய்த்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தித்தான், டட்லி அரசாங்கத்துடன் தமிழரசுக்கட்சி கடந்த நான்கு ஆண்டுகளாக ஒத்துழைத்துப் பார்த்தது.

ஆனால் தமிழ்க் காங்கிரஸ் அரசாங்கத்துடன் ஒத்துழைத்ததற்கும், தமிழரசுக்கட்சி ஒத்துழைத்ததற்கும் பெரும் வேறுபாடு உண்டு. தமிழ் காங்கிரஸ் சிங்கள அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு முழு மந்திரிப் பதவிகளையும் அரை மந்திரிப் பதவிகளையும் நிபந்தனையாக விதித்தது. தமிழரசுக் கட்சியோ தமிழ் பேசும் மக்களின் குறைந்த பட்ச அரசியல் மொழி பிரதேச உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதையே நிபந்தனையாக்கியது.

தமிழரசுக் கட்சி தமிழினத்தின் உரிமைகளைப் பெற ஒத்துழைத்துப் பார்த்தது; தமிழ் காங்கிரஸ் தமிழுரிமைகளை விற்றுவது மந்திரிப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒத்துழைத்தது;


இன்று எத்தகைய ஒத்துழைப்பு மூலமும் ஈழத் தமிழினத்தின் உரிமைகளை நிலைநாட்ட முடியாதென்பது செயல் மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டது. ஒற்றையாட்சி இருக்கும்வரை எந்தச் சிங்கள அரசாங்கத்துடன் ஒத்துழைத்தாலும் கூட தமிழினம் இலங்கையில் சுதந்திரம், சுபீட்சம், தன்மானம் இவற்றுடன் வாழ முடியாதென்பதைத் தமிழரசுக் கட்சியின் கடந்த நான்கு ஆண்டுகால ஒத்துழைப்பு உறுதிப்படுத்தி விட்டது.

நாம் சென்றவாரம் குறிப்பிட்டிருந்தது போல, தமிழ் பேசும் மக்களின் எந்த கோரிக்கையையாவது சிங்கள ஆட்சி பீடம் நிறைவேற்றும் என்று இனியும் எதிர்பார்ப்பது பட்டாள் தனமானது. தமிழ் பேசும் இனத்தை அணைத்தோ— எதிர்த்தோ நிர்மூலமாக்கிவிட எண்ணும் சிங்கள ஏகாதிபத்தியம் இந்நாட்டில் தமிழையும், தமிழ் பிரதேசங்களையும் தமிழ் கலாசாரத்தையும் வளர்ப்பதற்கு உதவும் என்று எதிர்ப்பார்ப்பது வீண் வேலையாகும்.

தமிழரசுக் கட்சியின் இலக்கிய மாநாட்டில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. குறிப்பிட்டிருப்பதைப் போன்று மொழி, கலாசார உரிமைகளைப் பெறுவதற்கு முன்பு இன விடுதலையை பெறவே ஈழத் தமிழினம் போராட வேண்டும்!

இன்றைய ஒற்றையாட்சி அமைப்பு முறை மாற்றப்பட்டு, தமிழ் பேசும் பிரதேசத்தில் தமிழ் பேசும் மக்கள் தங்கள் சுயாதீனத்தை நிலைநாட்டக் கூடிய சமஷ்டி அரசமைப்பை ஏற்படுத்துவதற்கு போராடுவதே ஈழத் தமிழினத்தின் இன விடுதலையைப்பெற ஒரே வழியாகும்.

சிங்களக் கட்சிகள் எதுவும் தமிழ் பேசும் மக்களின் சுயாட்சிக் கோரிக்கையை இன்று ஏற்காமல் இருக்கலாம். ஆனால் தங்கள் கோரிக்கையை சிங்களக்கட்சிகள் ஏற்கும்படி வைக்கும் வல்லமை தமிழ் பேசும் மக்களின் கைகளில்தான் தங்கியிருக்கிறது.




## சுதந்திரம், சமத்துவம், தன்மானத்துடன் வாழ

# சமஷ்டியே ஒரே வழி!

## தமிழரசு மாநாட்டுத் தீர்மானங்கள்!

இன்றுள்ள ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் இயங்கும் இன்றைய அரசாங்கத்தில் 4 ஆண்டுகள் அங்கம் வகித்தபின் கூடியிருக்கும் தமிழரசுக்கட்சியின 11வது மாநில மாநாடு, இவ்வனுபவத்தின் பின் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கி யிருக்கும் அரசியல் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஒரே வழி இந்நாட்டில் சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்துவதுதான் என்ற தனது அடிப்படைக் கொள்கையை மீண்டும் ஊர்ஜிதம் செய்து, சமஷ்டி அமைப்பின் கிழன்றி தமிழ் பேசும் மக்கள் சுதந்திரம், சமத்துவம், தன்மானம்— இவற்றோடு வாழ முடியாதென்பதையும் பிரகடனப்படுகிறது,,

—இவ்வாறு கூறும் தீர்மானம் தமிழரசுக் கட்சியின் 11 வது மாநில மாநாட்டின் அரசியல் ஆலோசனைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தைக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் கொண்டு வந்தார்.

### இரண்டாவது தீர்மானம்

அரசாங்கத்துக்கு அளித்து வரும் ஆதரவைத் துண்டித்து எதிர்க் கட்சியாகத் தமிழரசுக்கட்சி செயல்பட வேண்டும் என்ற தீர்மானத்தை உடுப்பிட்டி திரு. கே. ஜெயக்கொடி முன் மொழிய திருக்கோவில் அரியநாயகம் வழி மொழிந்தார். அத்தீர்மான வாசகம் வருமாறு:-

டட்லி சேனநாயகாவின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இன்றைய இலங்கை அரசாங்கத்துடன் தமிழரசுக்கட்சி வைத்துள்ள உறவுபற்றி 11 வது மாநில மாநாடு பின்வரும் காரணங்களை முன்வைத்து ஆராய்ந்தது.

(அ) இலங்கையில் மாவட்ட சபைகள் நிறுவப்படுமென்ற மிகப்பெரிய வாக்குறுதியும், திருமலையில் பல்கலைக்கழகம் அமைப்பதென்ற வாக்குறுதியும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

(ஆ) தமிழ்ப்பகுதியில் தொழிற்சாலைகளை நிறுவுவதில் அரசாங்கம் காட்டி வரும் பாரபட்சம், கடற்றொழில் முன்னேற்றத்திலும் போக்குவரவு வசதிகள் செய்வதிலும் தமிழ் பகுதிகளுக்கு குறிப்பாக கிழக்கு மாகாணத்திற்கு எந்த விதமான அபிவிருத்தித் திட்டங்களும் செயல் படுத்தப் படவில்லை.

(இ) தமிழ்பேசும் மக்களின் கல்வி கலாசாரத் தேவைகள் புறக்கணிக்கப்படுவதுடன் தென் இந்தியத் தமிழர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கு மிடையே உள்ள கலாச்சார தொடர்பு

(9ம் பக்கம் பார்க்க)

அலுக்காமல், சலிக்காமல், களைப்பேற்படாமல் சோர்ந்து விடாமல்—ஆண்டுகள் எத்தனையானாலும் ஒரேயணியாக நின்று சமஷ்டிக் கோரிக்கையை முன் வைத்து தொடர்ந்து போராடி வந்தால், நிச்சயமாக ஒருகாலகட்டத்தில் சிங்கள ஏகாதிபத்தியம் இறங்கி வரும்நிலை ஏற்பட்டே தீரும் என்பதில் நமக்கு கிஞ்சித்தும் அசைக்கமுடியாத நம்பிக்கையிருக்கிறது.

ஆதிக்கக்காரர்கள் எவரும் அடிமைப்பட்ட இனத்துக்கு சுலபத்தில் சுதந்திரம் வழங்க முன்வந்ததாக வரலாறே கிடையாது. அடிமைப்பட்ட இனம், தனது சுதந்திரத்துக்காக காட்டும் உறுதியும் செய்யும் தியாகங்களும் உலக அபிப்பிராயங்களும்தான் ஆதிக்கக்காரர்களின் மனத்தை கரைத்து, சுதந்திரத்தை வழங்கச் செய்திருக்கின்றன. இதை தமிழ்மக்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு சமஷ்டி அரசமைப்பின்கீழ் சுயாதீனம் வழங்காமல் ஈழத்தில் அமைதி நிலவாது—கொந்தளிப்பு அடங்காது என்ற கருத்து சிங்களத் தலைவர்களின் மனத்தில் தைக்கும் வரை தமிழினம் தளர்ச்சியடையாமல் எதிர்ப்பியக்கத்தை தொடர்ந்து நடத்திக் கொண்டு வரவேண்டும்.

தமிழரசு மாநாட்டில் உரிமைப் போராட்டத்துக்கு மீண்டும் அறைகூவல் விடுக்கப்பட்டு விட்டது. விடுதலைப் போருக்கு வீட்டுக்கொரு வாலிபர் வரவேண்டும் என்று அழைப்பு விடுத்து விட்டார் தலைவர் இராசமாணிக்கம். இரத்தமும் வியர்வையும் கண்ணீரும் சிந்தத் தயாராகுங்கள் என்று அறிவித்துவிட்டார் தளபதி அமிர்தலிங்கம்.

போராட்டம் எதையும் ஆரம்பிக்கு முன்னர் தமிழ் பேசும் மக்களைப் போராட்டத்துக்குத் தயார் படுத்த வேண்டிய பெரும் பொறுப்புத் தமிழரசுக் கட்சிக்குண்டு. வடக்கு, கிழக்கிலுள்ள சகல கிராமங்கள் பட்டினங்களுக்கும் சென்று மக்களைச் சந்தித்து, அரசியல் விளக்கம் அளிக்கப்பட வேண்டும். தொண்டர்களைத் திரட்டிப் பயிற்சி அளிக்க வேண்டும். கட்டுப்பாடு நிறைந்த இனமாகத் தமிழினத்தை உருவாக்க வேண்டும்.

உரிமைப் போராட்டத்தின் வெற்றி தமிழினத்தவரின் ஐக்கியத்திலும் கட்டுப்பாட்டிலும் தான் முற்று முழுதாகத் தங்கியிருக்கப் போகிறது. நெருக்கடி நிறைந்த இன்றைய நிலையில் — போராட்டத்திற்கு அறைகூவல் விடுக்கப்பட்ட சமயத்தில் — தம் மத்தியிலிருக்கும் ஐந்தாம் படைகளையும் இனத்துரோகிகளையுமிட்டுத் தமிழ் மக்கள் மிகுந்த விழிப்புடனும் ஜாக்கிரதையுடனும் இருப்பது இன்றியமையாதது.

தொடங்க விருக்கும் எதிர்ப்பியக்கம் இனத்திற்குப் பூரண விடுதலையைக் கொண்டு வரும்வரை, பல்வேறு முறைகளில் தொடர்ந்து இயங்கக் கூடியதாகப் போராட்டத் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்பதைத் தமிழரசுத் தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுச்சியை ஏற்படுத்திய மூன்று நாட்கள்!

கோவை மகேசன்

பெரியவர், துலைக்கே?

மருதனுமடம் சந்திக்கு!

என்ன விசேடம் அங்கை நடக்குது?

"இது தெரியாவிட்டால் உனக்குத் தமிழனுக இருக்கத் தகுதி என்ன இருக்குது? எங்கடை தமிழரசு மாநாடு இண்டைக்கெல்லே ஆரம்பமாகுது!,

—யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலைக்கு செல்லும் இரட்டைத் தட்டு பஸ ஒன்றில் வயோதிபர் ஒருவருக்கும் காற்சட்டை அணிந்த ஆசாமியொருவருக்கும் இடையே நடந்த சம்பாஷணையிது. ஆம் இம்மாதம் 7ம் திகதி தமிழரசுக் கட்சியின் 11வது மாநில மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அதே டஸ்சில்பயணம்செய்து கொண்டிருந்த நான் அவ் வயோதிபரின் தமிழுணர்ச்சியைக்கண்டு வியக்கிறேன்.

அதோ, தள்ளாத வயதில் ஓர் மூதாட்டி, அவள் அருகே நடுத்தர வயதுப்பெண், நெற்றியில் நிறைந்த குங்குமத்துடனும் தலையில் பூவுடனும் காணப்படுகிறுள். மூதாட்டியின் மகளாக அவள் இருக்க வேண்டும. மூதாட்டி ஏதோ சொல்லுகிறுள்.

"எங்கடை காந்தி செல்வநாயகத்தை மாநாட்டில் எப்படியாவது எனக்கு காட்டிப்போடு மேனை; தமிழருக்காக எல்லாவற்றையும் இழந்து நோய் நொடியோடு கஷ்டப்பட்டும் இன்னும் எவ்வளவோ எங்களுக்காக பாடுபடுகிறது அந்த ஒருமனிசன்தான். இன்னும் எவ்வளவு காலத்துக்கு இருக்கிறனே அவரை ஒருக்காப் பார்த்துப்போட வேணும்"

—மூதாட்டி தமிழரசுத் தந்தைமீது வைத்துள்ள பேரன்பு கண்டு என் உள்ளம் சிலிர்க்கின்றது. மூதாட்டி மட்டுமா? அந்தா 4,5 இளைஞர்கள். ஏந்தா பேசுகிறுர்கள், அதைக் கவனிப்போமா?

'இந்தமுறை மாநாடு ஒரு திருப்புமுனையாக இருக்கப் போகிறதாம். என்ன முடிவு எடுப்பார்கள்?

'முடிவென்ன, பிறகும் போராட்டம்தான்;

'போராட்டத் திகதியை தளபதி அமிர்தலிங்கம் அண்ணன் அறிவிக்க வேண்டியதுதான் பாக்கி;"

எடே, எனக்கொரு ஆசையடா, தமிழுரிமைப் போரில் கலந்து கொள்ள வேண்டுமென்று! கருணநிதி கல்லக்குடி போராட்டத்தின் போது ரயிலின் குறுக்கேதலை வைத்துப் படுத்தது போல தமிழுககாக உயிரையே தர நானும் தயாராகி விட்டேன.

—இதை அந்த வாலிபர் கூறியபோது மிகவும் உணர்ச்சி வசப்பட்டவராகக் காணப்பட்டார்.

சிலம்புச் செல்வர் ம. பொ. சி.. வந்துவிட்டாரா? என்று மிகவும் அக்கரையோடுவிசாரிக்கிறுர் ஒருவர்.

ஆமாம், காலை 11 மணிக்கே வந்துவிட்டாராம். இன்றைய மாநாட்டில் கலந்து கொள்கிறுராம்.—இது மற்றவர்.

இப்படி பஸ்சுக்குள் நடைபெறும் சுவாரஸ்யமான சம்பாஷணைகளைக் கவனித்துக் கொண்டு வருகிறேன். சாதாரண ஏழை நடுத்தர தமிழ் மக்கள், தமிழரசுக் கட்சி மீது கொண்டுள்ள அளப்பரிய நம்பிக்கையும் இன



பத்திரிகைக் கண்காட்சி திறப்பாளர்

விடுதலை உணர்வும் என்னைப் புளகாங்கிதமடையச் செய்கின்றன. எத்தனை ஆண்டுகள் ஆனுலும், எத்தனை துன்பங்கள் அனுபவிக்க நேரிடினும் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களிடையே ஏற்றி வைத்துள்ள வீர சுதந்திர உணர்ச்சி குன்றுது; குறையாது; மங்காது; மடியாது என்று எனக்குள்ளாகவே கூறிக்கொள்ளுகிறேன்.

இதே வேளையில் மாற்றுக் கட்சியினர் இருவர் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தது என் நினைவுக்கு வருகிறது.

'தமிழரசுக்கட்சியின் செல்வாக்கு தேய்ந்துபோய்விட்டது. இந்தமுறை மாநாடு பெருந் தோல்வியில் முடியப் போகிறது. சனங்கள் தமிழரசுக் கட்சிமீது கொதிப்படைந்திருக்கிருர்கள். தமிழரசின் சரித்திரம் இதோடு சரி."

"ஏதோ திருப்பு முனையாக மாநாடு அமையப் போகிறது என்று பிரசாரம் செய்கிருர்களே!"

"எல்லாம் பொய். இவன்களாவது யூ. என். பி. யை விட்டு வெளியேறுவதாவது. முதலாளித்துவம் முதலாளித்துவத்தை விட்டு வெளியேறுமா?

—கம்யூனிஸ்ட் தோழர்கள் இருவர் இவ்வாறு 'எல்லாம் தெரிந்தவர்கள்' போல தங்களுக்குள் பேசிக் கொண்டதையும், இதோ பஸ்சுக்குள் மாநாட்டு அரங்கு நோக்கி செல்லும், மங்கையரும், தாய்மாரும், வாலிபரும், வயோதிபரும், மாணவரும் மற்றையோரும் பேசிக் கொண்டதையும் எடை போட்டுப் பார்க்கிறேன்.

உண்மையில் நான் கூட உள்ளூர சந்தேகப் பட்டுக் கொண்டு தான் இருந்தேன். கடந்த 4 வருடங்களாக தமிழரசுக்கட்சியினரின் பிரசார இயந்திரம் போதியளவு செயற்படவில்லை. அதே நேரத்தில் மாற்றுக்கட்சிகள் தமிழரசு மீது பொய்யும் புனைசுருட்டும் சயமையும் கலந்து பிரசாரம் நடத்தி வந்திருக்கின்றன தமிழரசாரின் மௌன நிலையும், எதிர்க்கட்சிகளின் பொய்ப் பிரசார வேகமும், தமிழ் மக்களை விடுதலைப்பாதையிலிருந்து பிரித்து விடுமோ என்று நான் அச்சப்பட்டதுண்டு.

ஆனல் பஸ்சுக்குள் கேட்ட உரையாடல்கள் எனது அந்த அச்சத்தை அகற்றுகின்றன. மாற்றுக்கட்சிகள் என்னதான் சுரடியாகக்கத்திஞலும் பொய்ப்பிரசாரங்களில் இறங்கிஞலும், தமிழ் பேசும் மக்கள் தங்கள் விடுதலை இயக்கமான தமிழரசுக் கட்சி மீதும், தியாகத் தீயில் புடம் போட்டெடுக்கப் பட்ட தங்கங்களான அதன் தலைவர்கள் மீதும் வைத்துள்ள விசுவாசமும், நம்பிக்கையும் எள்ளளவும் குலையாது; குலையவில்லை என்பதை நிதர்சனமாகக் கண்டேன்.

தமிழ் பேசும் மக்கள் [illegible] பரமாக எடுத்துக் காட்டுகிறது. ஒரே இயக்கத்தின் கீழ்— ஒரே தலைவனின் கீழ் ஆண்டுகள் எத்தனை ஆனலும், தொடர்ந்து போராடுவதன் மூலம்தான் தமிழினத்தின் சுயநிர்ணயமையை இந்நாட்டில் நிலைநாட்ட முடியும் என்ற அரசியல் சித்தாந்தத்தில் தமிழ் மக்கள் ஊறித் திளைத்துவிட்டார்கள். ஆகவே தமிழினத்தின் விடுதலைத் தாகத்தையாராலும் அவித்துவிட முடியாது.

இத்தகைய சிந்தனையில் நான் ஈடுபட்டிருந்தபோது 'இணுவில் சந்தி— இறங்குபவர்கள் இறங்கலாம்' என்று கத்திஞன் கண்டக்டர். முண்டியடித்துக்கொண்டு இறங்கினேன். ஆமாம், இணுவிலில் கண் காட்சித் திறப்பு விழாக்களில் கலந்து கொள்ளவேண்டாமா? அது தானே மாநாட்டின் ஆரம்ப நிகழ்ச்சி!

ஈழத்தமிழ் நாட்டின் எதிர்காலப் பொருளாதாரம் கைத்தொழில் கமத்தொழில், கடற்றெழில்—மூன்றிலுமே தங்கியுள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது. கோழி மேய்ச்சாலும் கோரணமேந்திலே மேய்க்கும் காலம்' மலையேறிவிட்டது. அரசாங்க உத்தியோகங்களுக்காக தமிழ் இளைஞர்கள இனிமேல் மாரடிப்பதில் பயனில்லை. அரசாங்க உத்தியோகங்கள் சிங்களவர்களுக்கு மட்டும் என்ற நிலை வந்துகொண்டிருக்கிறது. தமிழ் மக்களை அரசாங்க சேவையிலிருந்து அகற்றுவதற்காகத் தானே சிங்களம் மட்டும் சட்டமே உருவாகியது!

தமிழரசுக்கட்சிக்கு பொருளாதாரத் திட்டம் உண்டா என்று கம்யூனிஸ்ட் தோழர்கள் தாங்கள் பெரிய பொருளாதார புலிகள் என்று நம்பிக்கொண்டு கேள்விதொடுபபதுண்டு. ஈழத்தமிழ் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு தமிழரசுக் கடசியிடம் திட்டம் இல்லாமலில்லை. திட்டத்தை நிறைவேற்ற, ஈழத்தமிழ் நாட்டுக்கு சுயநிர்ணய உரிமை பெறுவதல்லவா முதல் வேலை!

ஈழத் தமிழ் நாட்டின் கைத்தொழில், கமத்தொழில் அபிவிருத்தியை எடுத்துக் காட்டும் கண்காட்சியை அமைத்திருந்த மாநாட்டு அமைப்பாளர்களை எவ்வளவு பாராட்டினுலும் தகும்!

இப்போதுபிற்பகல் 2மணி. இணுவில் சந்தை மைதானத்தல அமைக்கப் பட்டுள்ள இக் கண்காட்சியைத் திறந்து வைப்பது யார் என்பதை அறிவதற்கு 'புரோகிராமை' புரட்டுகிறேன். அதோ, தளர்ந்த உடலுடனும், தளராத உள்ளத்துடனும் மெதுவாக ஓர் உருவம் வந்து கொண்டிருக்கிறது. அந்த மெலிந்த உருவத்தின் கைகளில்தானே இந்த நாட்டிலுள்ள 25 இலட்சம் தமிழ் மக்கள் தங்கள் எதிர்காலத்தையே ஒப்படைத்திருக்கிருர்கள். உதடுகளில் வழக்கமான அதே புன் முறுவல். ஆம், தமிழர் தந்தை செல்வா வருகிறுர். தமிழ் மரபுப்படி குத்துவிளக்கேற்றி கண்காட்சியைத் திறந்து வைக்கிருர்.

இந்த காட்சியை நாமும் ஒரு தரம் சுற்றி வருவோமா? கண்காட்சியில் தமிழ்ப் பகுதியிலுள்ள 60 கைத்தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டன. புத்தம் புதிய மரக்கறி வகைகள், ஈழத் தமிழ் நாட்டில் உற்பத்தியான சவர்க்காரம், பீடிகள், சப்பாத்துக்கள், சுருட்டுக்கள். போன்ற இன்னும் பல உள்ளூர் உற்பத்தி பொருட்கள் காட்சி தருகின்றன.


ஒரு புறத்தில் தமிழரசுக் கரை போட்ட சால்வை, வேட்டி, கைத்தறி துணிகள்



கைத்தொழில் கமத்தொழில் கண்காட்சித் திறப்பாளர்

விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன.

'இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதில் புதிய ஆர்வம் பிறந்திருப்பதை நேரடியாகக் காண்கிறேன். தமிழ் நாட்டில் கூட எந்த ஒரு அரசியல் கட்சி மாநாட்டிலும் இத்தகைய கண்காட்சிகள் இடம் பெறவில்லை. ஈழத் தமிழர்கள் தங்கள் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தியில் கொண்டுள்ள ஈடுபாட்டைக் கண்டு உளம் பூரிக்கிறேன்."



புகைப்படக் கண்காட்சி திறப்பாளர்

—கண் காட்சியைப் பார்வையிட்ட பின்னர் ம. பொ. சி. சிந்திய வார்த்தைகள் தாம் இவை.

இக் கண்காட்சி அமைப்பாளர்கள், சிறிது முன் கூட்டியே இத்துறையில் பணியா

(8-ம் பக்கம் பார்க்க)



புத்தகக் கண்காட்சி பொறுப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய 'பாரதம்' படைப்போம்!

## அரசியல் மடல்

அன்பு நண்பா,

உள்ளே குமைந்து கொண்டிருந்த எரிமலை குமுறி வெடித்தது!

அமைதியாக வீசிக் கொண்டிருந்த இளந்தென்றல் புயலாக உருவெடுத்தது!

சலனமற்று ஓடிக்கொண்டிருந்த சமுத்திரம் பேரிரைச்சலுடன் பொங்கியெழுந்தது!

இவையெல்லாம் ஒருசேர எங்கு நடந்தன என்று திகைக்கிறாயா? கடந்த வாரம் யாழ்ப்பாணப் பூமியிலே தமிழரசுக் கட்சியின் 11வது மாநில மாநாட்டின் இறுதி நாளன்றுதான்.

ஆமாம் தோழா, பொறுமையின் எல்லைக்குத் தள்ளப்பட்டுவிட்ட தமிழ் பேசும் மக்கள், எரிதழலாக—புயலாக—பொங்கியெழும் அலைகடலாக—உருமாறிவிட்டார்கள் என்பதை சென்றவாரம் உணர்த்திவிட்டனர். அப்பப்பா, மாநாட்டின் இறுதி நாள் ஊர்வலத்தின் போதும் பொதுகூட்டத்தின் போதும், தமிழ்மக்கள் காட்டிய எழுச்சியும் கரைகடந்த உற்சாகமும் விடுதலைத்தாகமும் உள்ளபடியே மெய்சிலிர்க்கவைக்கின்றன. எந்த மாநாடும் இந்த மாநாட்டுக்கு ஈடாகாது என்றுகூறும் நிலையில் தமிழரசுக்கட்சியின் 11வது மாநாடு வெற்றி பெற்றிருக்கிறது!

நண்பா, கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழரசுக் கட்சிமீது மாற்றார்களால் வீசப்பட்ட சொல்லம்புகள்—எய்யப்பட்ட இழிமொழிகள் கொஞ்சநஞ்சமல்லவென்பதை நீ அறிவாய். அதையெல்லாம் தாங்கிக்கொண்டு பொறுமை காட்டி வந்தனர் தமிழரசார் என்றால், அதற்குக் காரணம் தமிழினத்தின் சில உரிமைகளையாவது அரசாங்கத்திடமிருந்து 'கறந்து' விடவேண்டுமென்பதே!

ஒரு கதை சொல்கிறேன் கேட்கிறாயா?-தாயொருத்தி—இளம் பெண்தான்—நோய்வாய்ப்பட்டு ஆபத்தான நிலையிலிருக்கும் தன் அருமைக் குழந்தையை தூக்கிக்கொண்டு ஓடுகிறாள் மருந்தகத்துக்கு—அவள் போகும் வழியில் சில காடையர்கள் நின்று 'நரகல்மொழி' பேசுகிறார்கள்.

'அதோ போகிறாளே அவளுக்கும் அடுத்த தெருவிலிருக்கும் அருணாசலத்துக்கும் ... ...' என்று குசுகுசுக்கிறான் ஒருவன்.

போடா போ, ஒரு 50ரூபா இருந்தால் என்னாலும்...... என்று வாயில் ஜலம் ஊறக் கூறுகிறான் மற்றொருவன்.

மூன்றாமவனோ 'நடையா இது நடையா?' என்று சினிமாப் பாணியில் நெளிகிறான்.

—காடையர்களின் பேச்சு அப்பெண்ணுக்கு உள்ளத்தை உறுத்துகிறதுதான். வேறு சந்தர்ப்பமாக இருந்தால் அவர்களை ஒரு 'கை' பார்க்காமல் அவள் போக மாட்டாள். மானமுள்ள தமிழச்சி அல்லவா? ஆனால் இப்போது உயிருக்குத் துடிக்கும் தனது கைக்குழந்தை தோளில்—அதை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்பதே அவளது இலட்சியம். எனவே தான் எக்காளப் பேச்சுக்களுக்குச் செவி கொடுக்காது ஓடுகிறாள் டாக்டரை நோக்கி!

நண்பா, அதே பெண்ணின் நிலையில் தான் தமிழரசுக் கட்சி இதுநாள்வரையிருந்து வந்தது.

தமிழரசுக்கட்சியை யூ. என். பி. விழுங்கிவிட்டது!

தமிழரசுக் கட்சி இனி யூ. என். பியை ஒரு போதும் எதிர்க்காது!

முதலாளித்துவமும் முதலாளித்துவமும் இணைவது தானே அரசியல் சித்தாந்தம்!

தமிழரசுக்கட்சி சமஷ்டிக் கொள்கையைக் குழிதோண்டிப் புதைத்து விட்டது!

தமிழரசுத் தலைவர்கள் மீது இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள். அதனால் தான் 'ஒட்டிக்' கொண்டிருக்கிறார்கள்.

தமிழரசுக்கட்சி தமிழ் மக்களிடையே செல்வாக்கிழந்து விட்டது!

—இப்படி எத்தனையோ வசைமாரிகள் தமிழரசுக் கட்சி மீது பாடப்பட்டு வந்தன. இதையெல்லாம்கட்சி தாங்கிக் கொண்டது. கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும். அப்போது அரசியல் எதிரிகளின் வாயை அடக்குவோம் என்று காத்திருந்தனர் தமிழரசுத் தலைவர்கள்.

தோழா, தமிழரசுக் கட்சியின் எதிரிகள் நடத்திய பொய்ப்பிரசாரங்களை நம்பி கட்சியில் இருந்த சில நண்பர்கள் கூட கட்சிக்கு விரோதமாகச் செயற்படவும் ஆரம்பித்தனர். கட்சியின் நோக்கங்களையும் இலட்சிய வெறியையும் அறிந்துகொண்ட கட்சித் தோழர்கள் சிலரே பொய்ப் பிரசாரத்தில் ஏமாந்து கட்சிக்கு எதிராக செயல்பட ஆரம்பித்ததை அவதானித்த போது சாதாரண தமிழ்ப் பொது மக்களும் பொய்ப் பிரசாரத்தில் மயங்கியிருப்பார்களோ என்றுகூட நான் சந்தேகப்பட்டதுண்டு.

ஆனால், கடந்த வாரம் தமிழரசு மாநாட்டிலும் ஊர்வலத்திலும் தமிழ் பேசும் மக்கள்—காளையரும் கன்னியரும் வயோதிபரும் தாய்மாரும் மாணவரும் மாணவியருமாக உரிமை உணர்ச்சி வீறுகொண்ட நிலையில் ஆயிரக் கணக்கிலே கலந்து கொண்டு, தமிழரசுக்கட்சி மீதும், தலைவர்கள் மீதும் தங்களுக்கிருக்கும் [illegible] உறுதிப்படுத்தி விட்டனர்!

ஆமாம் நண்பா. 1961ம் ஆண்டு இந்த நாட்டையே குலுக்கி—ஈழத் தமிழ் நாட்டில் சிறிமா அம்மையாரின் ஆட்சியை ஸ்தம்பிக்க வைத்த தமிழுரிமைப் போராட்ட காலத்தில் தமிழ் மக்களிடையே இருந்த ஐக்கியத்தையும் வீர உணர்வையும் மாநாட்டின்போது மீண்டும் கண்டேன்!

அதுமட்டுமல்ல, இயக்கத்தை விட்டு விரக்தியடைந்து ஒதுங்கியிருந்த செயல்வீரர்களான அறப்போர் அரிய நாயகம், புதுமைலோவன் போன்ற நண்பர்கள் சிலரை மீண்டும் இயக்க மேடையில் கண்டபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்குத் தான் எல்லையேது?

தாமெல்லாம் ஓர் குடும்பம்
இந்த
நலமிக்க வார்த்தையில்
தான்
என்ன இன்பம்?

என்று புரட்சிக் கவிஞர் எழுதிய கவிதையே என் நினைவுக்கு வந்தது!

யார் என்ன சொன்னாலும் சரி, எங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் நீங்கள் தான். எங்கள் இனத்திற்கு விடுதலை வாங்கித் தரக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள் நீங்கள் தான். உங்கள் நேர்மையையும் தியாகத்தையும் நாங்கள் சிறிதும் சந்தேகிக்க மாட்டோம். எந்த வழியிற் சென்றாலும் இனத்தின் உரிமைகளை மீட்டுத் தாருங்கள்-என்று தமிழ் பேசும் இனம் தமிழரசுக்கட்சியிடம் திட்டவட்டமாகத் தெளிவாகக் கூறிவிட்டது.

தேரான் தெளிவும்
தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

ஒருவனைச்சரிவர அறியாமல அவனைப்பற்றி அறிந்தவன் போலக் காட்டிக் கொள்தலும்,ஒருவனை தெளிவாக அறிந்து புரிந்து கொண்டபின் அவன்மீது ஐயம் கொள்தலும், மாறாத இன்னலைத் தரும்.

இதனை இதனால் இவன்
முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்.

ஒரு காரியத்தை செய்து முடிக்கக் கூடிய ஆற்றல் ஒருவனுக்கு இருக்கிறது என்று ஆராய்ந்து அறிந்த பின்னர் அதனை அவனிடம் ஒப்படைத்து விடவேண்டும்.

நண்பா, தமிழ் மறை கூறும் கருத்து இது. விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் முக்கியமாகப் பின்பற்றவேண்டிய கருத்து.

வள்ளுவர் காட்டிய இவ்வழியில், ஈழத் தமிழினம் வீறு நடைபோட்டு வருகிறது. ஆண்டுகள் எத்தனையானாலும் துன்பங்கள் கோடி துளைத்தாலும், எட்டப்பர்கள் என்னதான் கூறினாலும்-ஏமாற்றங்கள் பல நேர்ந்தாலும், கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதையானாலும் சத்தியத் தலைவன் செல்வாவின் நேர்மையும் தியாகமும் நிறைந்த தலைமையின் கீழ்தான் இயங்குவோம் என்பதை தமிழின மக்கள் ஐயத்துக்கு இடமின்றி நிரூபித்து விட்டார்கள். தமிழரசுப் பாசறை தியாகிகள் நிறைந்த விடுதலைப் பாசறையென்பதை உறுதிப்படுத்தி விட்டார்கள்.

ஆமாம் தோழா, இறுதி நாள் ஊர்வலத்தில் கலந்து கொண்ட வீறுகொண்ட தமிழர்களின் தொகை எவ்வளவு தெரியுமா? தமிழினத்தின் விரோதியான டெயிலிநியூஸ் ஏடே கூறுகிறது 50,000 மக்கள் கலந்து கொண்டார்கள் என்று!

நண்பா, மருதனமடத்திலிருந்து யாழ். கோட்டை மைதானத்தை நோக்கி பி. பகல் 4 மணிக்கு புறப்பட்ட நடைபவனி, மைதானத்தை இரவு 10 மணிக்குத்தான் சென்றடைந்தது என்றால் பாரேன்! ஆறு மணிநேர ஊர்வலம், ஊர்வலம் சென்ற சாலையின் இருமருங்கிலும் தமிழ் மக்கள்முண்டியடித்துக் கொண்டு நின்றனர். தன்னந்தனியாக என்று நினைக்கிறாய்? அல்ல; தங்கள் தங்கள் "இல்லக் கிழத்திகளுடன்" தான்!

அதுமட்டுமா? சாலையின் இருமருங்கிலும் காணப்பட்ட வீடுகளின் சாளரங்களினூடாக மலர்ந்த தாமரை மலர்கள் தான் எத்தனை!

இத்தகைய அழகுமிக்க—உணர்ச்சிமிக்க ஊர்வலத்தை, வேறு எந்த ஊர்வலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம் என்று சிந்தித்துச் சிந்தித்துப்பார்க்கிறேன். எதுவும் கிடைக்கவில்லை.

இராமன் மிதிலைக்கு வில்லை முறித்த வெற்றிக்களிப்புடன் சென்றபோது அவனைக் காணக்கூடிய மக்கள் கூட்டத்தை வர்ணிக்கும் கம்பர் தரும் காட்சியுடன் ஒப்பிடலாமென்றால், மிதிலையில் கூடிய மக்கள் மகிழ்ச்சி நிறைந்த மனத்தினராய் கூடியிருந்தனர். இந்த ஊர்வலத்தில் கூடிய தமிழர்கள் பொறுமையின் எல்லைக்குச் சென்று கொதிப்படைந்த நெஞ்சத்தினராக கலந்து கொண்டனர்.

ஆதிக்கக்காரர்களை எதிர்த்து வீராவேசத்துடன் 'பஸ்டைல்சிறையை' துவம்சம்செய்யச் சென்ற பிரஞ்சுப் புரட்சிக்காரர்களின் ஊர்வலத்துடன் ஒப்பிடலாமோவென்றால், பிரஞ்சுப் புரட்சிக்காரர்கள் பலாத்காரவெறிகொண்டிருந்தனர். நம்முடைய ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களோ அகிம்சா வீரர்களாக இருந்தனர்:

நண்பா,

"வெள்ளம் போல்
தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்
அன்னார்
உள்ளத்தால் ஒருவரே
மற்றுடலினால்
பலராய் காண்பார்"

என்ற புரட்சிக்கவிஞரின் பாடல்தான் இந்த ஊர்வலத்தைக் கண்டபோது எனக்கு ஏற்பட்டது.

நண்பா, மாநாடு, சோர்ந்து கிடந்த தமிழ் உள்ளங்களுக்கு எழுச்சியூட்டி விட்டது. விடுதலைப் பாதையில் ஓர் திருப்பு முனையாக அமைத்துவிட்டது தமிழுரிமைப்போர் மீண்டும்

(9ம் பக்கம் பார்க்க)


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் உரிமைக் கிளர்ச்சிகளுக்கு தமிழ் நாட்டிலிருந்தபடியே உதவுவேன்!

'தமிழன் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், தனது மொழியுரிமை, கலாசார உரிமைகளை பெறுவதற்கு முன்னர் ஆட்சியுரிமையை வென்றெடுக்க வேண்டும். அதனால்தான், இலங்கைத் தமிழர்களின் அரசியலுரிமைக்காகவும் இனவிடுதலைக்காகவும் தள்ளாத வயதிலும் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்கள் ஓய்வொழிச்சலில்லாது உழைத்து வருகிறார்.

"இலங்கைத் தமிழர்கள் தொடங்கவிருக்கும் நியாயமான உரிமைப்போராட்டங்களுக்கு எனது ஆதரவும் ஆசியும் என்றும் உண்டு. உங்கள் போராட்டத்திற்கு நான் இங்கிருந்தல்ல தமிழ் நாட்டிலிருந்த படியே எல்லாவகையான ஒத்துழைப்பையும் அளிப்பேன்'

—இவ்வாறு தமிழரசுக்கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் உடுவிலில் நடைபெற்ற தமிழரசு மாநாட்டின் இலக்கிய அரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய போது உணர்ச்சி பொங்க முழங்கினார்.

## தமிழ் இன விடுதலையே முதல் தேவை; அதற்கே செல்வா போராடுகிறார்!

தமது பேச்சை ஆரம்பிக்கும்போது தமிழரசுத் தந்தையின் பக்கம் திரும்பி "இலங்கைத் தமிழர்களின் காந்தியாக விளங்கும் செல்வநாயகம் அவர்களே!" என்று அழைத்த போது எழுந்த ஆரவார கரகோஷம் அடங்க பல நிமிடங்கள் பிடித்தன.

சிலம்புச் செல்வர் ஆற்றிய உரையின் சாரம் வருமாறு:-

பல ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கைக்கு வந்திருப்பதிலும், உங்களைப் பார்ப்பதிலும், உங்கள் மத்தியில் பேசுவதிலும் நான் மட்டற்ற மன மகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் இங்கு வரவும், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும், என்னை அனுமதித்து எனக்கு விசா கொடுத்த இலங்கை அரசாங்கத்துக்கு நான் முதலில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

### இதுபோன்ற சனத்திரளைக் கண்டதில்லை

பல தடவை நான் இங்கு வந்திருந்தாலும், பலவிழாக்களில் கலந்து கொண்டு பேசியிருந்தாலும், இது போன்ற ஜனத்திரளை—மக்கள் கூட்டத்தை நான்கண்டதில்லை. இதற்கெல்லாம் காரணம் இலங்கைத் தமிழ் மக்களின் ஏகபோக செல்வாக்குப் பெற்ற கட்சியான தமிழரசுக் கட்சியின் மாநாடாக இப்பெருவிழா இருப்பதுதான்.

எனது தலைமையில் இந்தியாவில் இயங்கிவரும் தமிழரசுக் கழகத்துக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குமிடையில் 'தமிழரசு' என்பதிலேயே ஒற்றுமை உண்டு. கொள்கையிலும் ஒற்றுமை உண்டு.

### தமிழுக்கு முதலிடம்

தமிழர்கள் இந்தப் பரந்த உலகில் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் வாழ்வில் எதிலும் தமிழ் முதல் இடம் பெற வேண்டும் என்பதே எனது கழகத்தின் கொள்கையாகும். தமிழர்கள் எந்த நாட்டில், எந்த ஆட்சியில், எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் அவர்கள் வாழ்வில் தமிழ் முதலிடம் பெற்றே திர வேண்டும்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி என்பார்கள். வாளோடு முதல்



தோன்றிய மூதல் குடியின் முதல் மொழியான தமிழ் மொழி தமிழனின் வாழ்விலேயே இன்னமும் முதலிடம் பெறவில்லை என்பதை நினைக்க வேதனையும் வெட்கமும் தான் ஏற்படுகின்றது. உலகில் எந்த நாட்டிலும், எந்த இனத்துக்குமே இந்த நிலை இல்லை.

### தமிழ் இலக்கணம்

தமிழுக்கு இலக்கணம் தனித்தன்மை வாய்ந்தது. வேறெந்தமொழிக்குமே இந்தத் தனித்தன்மை இல்லை. எழுத்ததிகாரத்தில் தொடங்கி, சொல் அதிகாரத்தில் வளர்ந்து, பொருள் அதிகாரத்தில் முடிகிறது தமிழ் இலக்கணம்.

மனிதருள் எப்படி வாழலாம் என்பது ஒரு நியதி. இப்படித்தான் வாழவேண்டும் என்பது ஒரு நியதி. இது தான் தமிழன்நீதி. தமிழன் வாழ்வு தமிழ் இலக்கணத்தோடு சேர்ந்தது. நாம் அப்படி வாழ்கின்றோமா? இல்லை. அதற்குத்தானே நாம் முயன்று கொண்டிருக்கின்றோம். உலகம் எம்மை விடுகின்றதில்லை என்பது தான் அந்த உண்மை.

### சிங்கள நாடா ஈழமா?

இலங்கை சிங்களநாடு என்றும், சிங்களத்தீவு என்றும் இந்தியக் கவிஞர்கள் பாடுவதை நிறுத்த வேண்டுமென இந்த மேடையில் மட்டு நகர் எம். பி. திரு. இராசதுரை பேசும்போது வேண்டுகோள் விடுத்திருந்தார். எங்கள் நாட்டில், எங்கள் இந்த

திற்கே எமது தமிழ்ப்பெயரை வைக்க எம்மால் முடியாத ஒரு நிலையில் நாம் இருக்கிறோம். அடிமைப்பட்ட காலத்தில், அடிமைப்பட்ட புத்தியில் நாம் வேறு எப்படி அழைப்போம். பெரியபுராணம், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பல நூல்களிலும் இலங்கை 'ஈழம்' என்றே குறிப்பிடப்படுகின்றது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

### இலங்கை நூல்கள்

இலங்கை நூல்களை இந்தியாவில் கொண்டுசெல்ல அரசாங்கம் தடை விதிப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென திரு. கனக செந்திநாதன் இங்கு பேசியதையும் நான் சிந்திக்கவேண்டியவனாக இருக்கிறேன். ஆனால் அதனை நாம் இங்கு விவாதிக்கக்கூடாது. ஏனென்றால் என்னை அரசியல்வாதியாக இல்லாமல் ஒரு கலாச்சார வாதியாகவே டட்லி அரசாங்கம் இங்குவர அனுமதித்துள்ளது. எனவே இது பற்றி நான் விவாதிப்பது பயங்கரமானது. ஆனால் ஒன்றைமட்டும் நான் இங்கு கூற விரும்புகின்றேன்.

இலங்கை நூல்களை இந்தியாவில் வாசிக்க அதன் நடை, சொற்கள் சற்று விளங்காமல் இருக்கின்றன. இதில் இருபகுதியாரும் கூடிப்பேசி ஒருமைப்பாட்டுக்கு வரவேண்டும் என்று நான் கருதுகின்றேன்.

எந்த ஒரு பெரும்பான்மை இனமும், சிறுபான்மை இனத்திடம் தனது மொழியைத் திணிக்க எத்தனிப்பது ஏகாதிபத்தியமானதாகும். மொழியால், கலையால், கலாசாரத்தால் நாம் ஒரே இனமாக இருந்தாலும் நான் இந்தியன். நீங்கள் இலங்கையர்கள். எமக்குள்ளே ஆட்சி, அரசியல், நீதியெல்லாம் வெவ்வேறானது. பூரண, புனிதமான, தமிழகத்தில் நான் வாழுகின்றேன் என்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இது எனக்குப் பெருமையைத் தருகின்றது.

### 'மட்ராஸ்காரன்'

இதனைப் பெற்றுக்கொடுத்த அறிஞர் அண்ணாவை தமிழ்கூறும் நல்லுலகம் மறந்து விடமுடியாது; எந்த ஆணவம் கொண்ட, படைப் பலம் கொண்ட ஆட்சிதான் வந்தாலும் இனி எங்களை "மட்ராஸ்காரன்" என அழைக்க முடியாது.

தமிழனுடைய ஆதித்தமிழ் சைவம். சுத்தத்தமிழ்சைவம் அதனால் தான் சைவமும், தமிழும் தழைத்தோங்க வேண்டுமென அக்காலத்திலேயே பாடினார்கள். தமிழில் விருத்தப்பா பாடியிருக்காவிட்டால் பாமரமக்களை கவர்ந்து இழுக்கும் தமிழ் உணர்வு தமிழில் இல்லாது போயிருக்கும்.

இன ஒருமைப்பாடுதான் கலையைக் காக்கும். இதனால் தான் கலாச்சாரரீதியாக இங்கு வந்த நான் இனஒருமைப்பாடுபற்றி இங்குகுறிப்பிடுகின்றேன்.

### இனத்தால் ஒருமை

மதத்தால் எமக்குள் பிளவு இருந்தாலும் தமிழன் என்று இனத்தால நாம் ஒன்றுபட்டவர்கள். மென்மையான உதடுகளில் கொஞ்சி விளையாடும் ஒருமொழிதான். தமிழ். தமிழன் தனது மொழியுரிமை, கலாச்சார உரிமையைப் பெறுவதற்கு முன்னர், தனது அரசியல் உரிமையைப் பெறவேண்டும். இலங்கைத் தமிழர்களின் அரசியலுரிமைக்காகவும், இன விடுதலைக்காகவும் தானே தந்தை செல்வநாயகம் அவர்கள் இந்தத் தள்ளாத வயதிலும் இங்கு வந்தும் உழைத்துக்கொண்டிருக்கின்றார்.

இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்குமிடையே பரம்பரையான தொடர்பு இருந்துவருகின்றது இதைக் காப்பியங்கள், இதிகாசங்கள், புராணங்கள் மூலமே காணக்கூடியதாக இருக்கின்றது. சிங்களத் தலைவர்களையும், ஆட்சியாளர்களையும் சந்திக்க நேர்ந்தால் எமக்குள்ள பரஸ்பரமான தொடர்பு பற்றி நான் எடுத்துக் கூறுவேன். இலங்கைத் தமிழர்களும், இங்குள்ள சிங்கள மக்களும் ஒற்றுமையாக இருக்கவேண்டிய அவசியம் பற்றியும் நான் வலியுறுத்துவேன்.

## தமிழரசு மாநாட்டில் ம. பொ. சி. முழக்கம்!

இந்தியத் தமிழர்களை இலங்கைக்கு அழைப்பது போல, இலங்கைத் தமிழர்களை இந்தியாவுக்கு அழைப்பதில்லையென இங்கு ஒரு தப்பான கருத்து நிலவி வருகின்றது. காலஞ்சென்ற நடேசபிள்ளை இந்தியாவில் நடந்த ஒரு தமிழ் விழாவுக்குத் தலைமை வகித்தார். பண்டிதர் கா. பொ. இரத்தினம் இந்தியாவில் பேசாத இடமே இல்லை. யாழ்ப்பாணத்து நாவலர், கதிரவேற்பிள்ளை ஆகியோர் இலங்கையிலும் பார்க்க, இந்தியா

(9ம் பக்கம் பார்க்க)

சிந்தனைக்கு

தமிழரசுக் கட்சியை

பெலவீனப்படுத்தாதீர்கள்

கொழும்பு —சமூக அபிமானி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சியை ஏற்படுத்திய மூன்று நாட்கள்!

# மாநாட்டு பந்தல் முகப்பில் அண்ணாவும், பாரதியும்!

(5ம் பக்கத்தொடர்)

யாற்றியிருந்தால் கண்காட்சி இன்னும் பயனுள்ளதாகவும், சிறப்பாகவும் அமைந்திருக்கும் என்பதை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

கடிகாரத்தைப் பார்க்கிறேன். பணி பி. பகல் 2-30 பத்திரிகைக் கண்காட்சித் திறப்பு விழாவைக் காணப் போவோமா? இக் கண்காட்சியை அமைத்தவர் குரும்பசிட்டி இரா. கனகரத்தினமும் அவரது துணைவியாரான பவளராணி அம்மையாருமே கொள்கை வெறியும், விடுதலை உணர்வும் நிரம்பப் பெற்ற இளைஞர் கனகரத்தினம் தமிழரசுத் தந்தை செல்வா பற்றிய இரு தொகுப்பு நூல்களை முன்னர் வெளியிட்டவர்!

பத்திரிகைக் கண்காட்சியை திறந்து வைக்கிறார், ஈழத் தமிழர்களின் இரும்பு மனிதரான டாக்டர் இ. மு. வி. நாகநாதன். என்கைகளில் கொண்டு வந்து ஒரு பிரசுரத்தை திணிக்கிறார் நண்பர் கனகரத்தினம். வாங்கிப் புரட்டுகின்றேன். எதற்காக இத்தொகுப்பை திரட்டினேம் என்று அப்பிரசுரத்தில் விளக்கம் தருகிறார்கள் கனகரத்தினம் தம்பதிகள். இதோ அதை நீங்களும் படியுங்கள்.

உடுவிலில் உங்கள் வீட்டுச் சமையலறையில் ஏதோ ஒரு காரணத்துக்காக குழி தோண்டுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம் அங்கே புத்தபகவானுடைய தோற்றங்கொண்ட கல்லொன்று அகப்பட்டது செய்தி தேடி அலையும் பத்திரிகை நிருபருக்கு இந்தப் புதினம் காதில் விழுகிறது. இதன் விளைவு?

'உடுவில என்ற கிராமத்தின் பெயர்தான் உடுவில் எனத்திரிந்தது: அந்த லைலராச்சுற்றி ஆயிரம் இங்கள பௌத்தர்களைக் குடியேற்ற வேண்டும். உடுவிலையைப் புனித நகராக்குக!

'பேச்சு மேடைகளே நாணிக்கோணுமளவுக்கு இந்நாட்டில் இப்படி ஓர் கூக்குரல் எழும்பிவிடும்!

'திருக்கோணேஸ்வரம், பாடல் பெற்ற தமிழர் பெரும்பதி என எதிர்காலச் சந்ததியினரிடம் கூறிப்பாருங்கள்—விழுந்து விழுந்து சிரிக்கப் போகிறார்கள்!

'இருபத்தைந்து இலட்சம் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த குரலைவிட ஒரு சில 'திற'க்களின் சக்தி இந்நாட்டில் மகத்தானது. நீர் ஒரு இலங்கைப் பிரஜையா என்று சில விண்ணப்பப்பத்திரங்களை நிரப்ப வேண்டுமானல் 'ஆம்' என்று போடலாமே தவிர நான் ஒரு இலங்கையன் என அந்தரங்க சுத்தியுடன் கூறும் தமிழனைக் காண்பது இந்நாட்டில் அபூர்வம்!

தொடர்பான சரித்திர வரலாறு அற்ற இந்த ஈழத் தமிழ் மக்களின் இழிநிலையை ஒழித்து, 1955 ம் ஆண்டின் பின் இலங்கை அரசியலில் ஏற்பட்ட தாக்கத்தை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள புதிய சகாப்தத்தை எதிர்கால சரித்திர ஆசிரியர்கள் மறைத்தும் திரித்தும் எழுத கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தினுல் உருவாகியது தான் இத் தொகுப்பு நூல்கள்.

ஈழத்தமிழர் சுதந்திரப் போராட்டமென்பது அரசியலை மட்டும் உள்ளடக்கவில்லை! பொருளாதார, சமய கலைகலாச்சார, குடியுரிமைச் சுதந்திரங்களையும், தாழ்த்தப்பட்டோர் என்பவரது விடுதலைக்கான போராட்டங்களையும் உள்ளடக்கியதாகும்.

'இன்றைய செய்தி நாளைய வரலாறு! சரித்திரம் எழுதும் தகுதியற்றவர்களாயினும் தமிழரின் சமீபத்திய சரித்திரத்தை எழுதுவோருக்கான 'கரு' வை வழங்க எங்களால் முடியுமென நம்புகிறேம். — அதற்கான பணியே இது!

'இங்கே காண்பவை எமது தொகுப்பின் ஒரு பகுதி மட்டுமே! இத்துடன் இப்பணி முடியவில்லை. இப்பொழுது தான் ஆரம்பமேயாகிறது. தமிழ்மக்களிடையே இன எழுச்சியை உருவாக்கும் ஒரு நிரந்தர கண்காட்சிக் கூடமாக இதனை ஆக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டு:

'இச்செய்திக் கோர்வையின் 10 பக்கங்களை ஒழுங்கு செய்யச் சுமார் 3 மணித்தியாலங்களும் அதனை ஒட்டி முடிக்க 4 மணித்தியாலங்களும், ஒரு தொகுப்பு நூலை உருவாக்க ரூபா 35/-ம செலவாகிறது!

ஈழத் தமிழினத்தின் சுதந்திரப் போராட்ட வரலாற்றை சிந்தாமல் சிதறமல் சேகரித்து பாதுகாத்து வரும் நண்பர் கனகரத்தினத்தையும் அவரது துணைவியாரையும் உளமாரப் பாராட்டி விட்டு அடுத்த நிகழ்ச்சிக்கு போவோமா?

இதோ புகைப்படக் கண்காட்சியை திறந்து வைக்கிறார் செயல்வீரரான சாவகச்சேரி பா. உ. திரு. நவரத்தினம். புகைப்படக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 800 படங்களும் நம் உள்ளங்களையெல்லாம் தமிழுரிமைப் போராட்ட காலத்துக்கு இழுத்துச் செல்கிறது. 1956 ம் ஆண்டு காலி முகத்திடலில் நடைபெற்ற முதல் சத்தியாக்கிரக போராட்டம் முதல் சிறீ எதிர்ப்பு போராட்டம், 1961 ம் ஆண்டு நடைபெற்ற கச்சேரி சத்தியாக்கிரகம் வரை நம் மனங்களில் திரைபோலியம் போல ஓடவாரம்பித்து விட்டது.

புதிய போரில் குதிக்கவிருக்கும் தமிழர்களுக்கு பழைய போராட்டக் கண்காட்சி எழுச்சியையும் துணிவையும் ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயம் தான் ஏது?

மாநாட்டை திறந்து வைத்து திரு. நவரத்தினம் இதோ பேசுகிறார் கேட்போம்

'இஸ்ரேலின் தலைநகராம் ஜெருசலத்துக்குள் நுழைந்ததும் இஸ்ரேலின் கடந்த காலப் போராட்டங்களையும் தியாகவரலாற்றையும் சித்தரிக்கும் புகைப்படத் தொகுப்புக் காட்சிகள் வைக்கப்பட்டிருக்கும். அங்கு அவைகளைப்பார்த்த பசுமையான நினைவுகள் இப்போதும் என் நெஞ்சத்தில் நிற்கின்றன. அதேபோன்று ஈழத் தமிழினத்தின் கடந்த கால வீரப் போராட்டத்தையும் தியாக வரலாற்றையும் சித்திரிப்பதாக இப்புகைப்படக் கண்காட்சியிருக்கின்றது.

தமிழர்களின் வீரத்தையும் தியாகத்தையும் எடுத்துக் காட்டுவதற்கு பண்டைய வரலாறுகள் எவையுமே எமக்குத் தேவையில்லை இங்கு வைக்கப்பட்டிருக்கும் புகைப்படங்களே போதுமானவை. 1961 ம் ஆண்டு தமிழர்கள் நடத்திய வீரப்போ[illegible] அக்காலத்தைய நினைவுச் சின்னங்கள் இன்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. வீரத்துக்குப் பாண்டிய நாட்டையோ கற்புக்குக் கண்ணகியையோ நாம் இனியும் நினைவுபடுத்த வேண்டியதில்லை. அத்தகைய சிறப்பு மிக்கவர்கள் நம் நாட்டிலும் வாழ்ந்தனர் வாழ்கின்றனர் என்பதை இப் புகைப்படக் கண்காட்சி எடுத்துக் காட்டுகிறது. எங்களின் போராட்ட வரலாறு நன்கு சித்தரிக்கப்பட்டிருக்கிறது'

இதன்பின் ஈழத்து இலக்கிய வளர்ச்சியை எடுத்துக் காட்டும் புத்தகக் கண்காட்சியை காண விரைந்தேன். இக் கண்காட்சியை பழம் பெரும் எழுத்தாளரான திரு. புதுமைலோலன் ஏற்பாடு செய்திருந்தார். ஈழத்து எழுத்தாளர்களின் 500க்கு மேற்பட்ட படைப்புக்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன. இவற்றில் இரசிகமணி கனக. செந்திநாதன் மட்டும் 250 நூல்களை கொடுத்திருந்தாராம்.

கண்காட்சி நடைபெற்ற மண்டபத்தின் வாயிலில் அறிஞர் அண்ணா காட்சியளித்துக் கொண்டிருந்தார். தமிழ் எழுத்துத்துறையில் மறுமலர்ச்சியைப் படைத்த அறிஞர் அண்ணாவின் திருவுருவப்படம் அங்கு இடம் பெற்றிருந்தது பொருத்தமானதே. அண்ணாவின் படத்திற்கு அருகில்'' 'சற்று நில்லுங்கள். அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்திவிட்டுத் தொடருங்கள்'' என்று எழுதப்பட்டிருந்த வாசகத்தை அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு நிமிர்ந்த பின்னர்தான் கண்டேன்.

இக்கண்காட்சியை திரு. அமிர்தலிங்கம் பா. உ. திறந்து வைத்தது பொருத்தமானதாக இருந்தது: ஏனெனில் எவ்வளவு அழுத்தமாகவும் உறைப்பாகவும அரசியல் பிரச்சினைகளையிட்டு விளாசுவாரோ, அதே போல தமிழ் இலக்கியத் துறையிலும் ஆழ்ந்த அறிவு படைத்தவர் திரு. அமிர்தலிங்கம்.

இக்கண்காட்சியைத் திறந்து வைத்த திரு அமிர்தலிங்கம் ஈழத்து எழுத்தாளர்களுக்கு தேன் போல இனிக்கும் ஒரு செய்தியைத் தெரிவித்தார். தென்னிந்திய வாசகர் வட்டம் போன்ற ஓர் அமைப்பை தமிழரசுக் கட்சி ஈழத்திலும் நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ளதென்றும் இந்த அமைப்பு, மாதத்துக்குஒரு நூலாக வெளியிடுமென்றும் திரு. அமிர்தலிங்கம் கூறியபோது எழுத்தாளர்கள் உள்ளம் நிச்சயமாகமகிழ்ந்திருக்கும்.

திரு. புதுமைலோலன் தமது உரையில் கூறியதாவது:—

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைப் படிக்காத காரணத்தினுல் ஈழத்து வாசகர்கள் ஈழத்து எழுத்தாளர்களைப்பற்றிச் சரியாக அறிந்து கொள்ள முடியவில்லை. ஈழத்தில் எத்தனையோ தரமான எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்பதனை இக்கண்காட்சியைப்பார்ப்போர் அறிவர்.

தமிழரசுக்கட்சி அரசியலுடன் மட்டும் நின்று விடாது தமிழ் இலக்கியத்தை வளர்க்கவும் முன்வர வேண்டும் [illegible] நாடுகளை நடத்தி ஈழத்து எழுத்தாளர்களுக்கு உதவ வேண்டும்.

திரு: அமிர்தலிங்கம் தமது பேச்சில் கூறியதாவது:—

''நம் நாட்டு எழுத்தாளர்களை நாம் ஊக்குவித்தால்தான் எழுத்தாளர்கள் தரமான இலக்கியங்களை படைக்கமுடியும். எழுத்தாளர்கள் தாம் எழுதிய நூலை கஷ்டப்பட்டு அச்சிட்டும் அதனை வாங்கிப் படிப்பார் இல்லை. ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை இங்கு உள்ளவர்கள் விரும்பிப்படிக்கக் கூடிய ஏற்பாட்டினைச் செய்ய நாம் திட்டம் தயாரித்து இருக்கின்றோம்.

தமிழ் எழுத்தாளர்களை அரசாங்கம் ஊக்குவிக்கும் என எதிர்ப்பார்க்காது ஒவ்வொரு தமிழனும் இதனைத் தனது கடமையாகக் கருத வேண்டும்.'

புத்தகக் கண்காட்சியை பார்வையிட்டுக் கொண்டிருந்த நான் நேரத்தைப் பார்க்கிறேன். மாலை 4. 30 ஆகி விட்டிருந்தது- மாநாட்டு அரங்குக்கு செல்லப்புறப்பட்டேன். இணுவிலிருந்து மருதனமடம் சந்தியில் அமைந்துள்ள மாநாட்டு அரங்குவரை வீதியின் இரு மருங்கிலும் மகர தோரணங்களும், மூவர்ணக் கொடிகளுமாக ஒரே கலகலப்பு. மாநாட்டிலிருந்து கண்காட்சியைப் பார்க்க வருவோர்களும், கண்காட்சி பார்த்து விட்டு மாநாட்டரங்குக்கு செல்வோருமாக— ஆண்களும் பெண்களும் வாலிபர்களும் மங்கையரும் மாணவர்களும் குழந்தைகளும் நிறைந்து காணப்பட்டனர். மாநாடு நடைபெற்ற 3 நாட்களும் இதே விழாக்கோலமும் கலகலப்பும் தான்.


தமிழ் மக்களின் இந்த எழுச்சியையும் உணர்ச்சியையும் மெச்சிக்கொண்டே மாநாட்டரங்கை அடைகிறேன். இந்திரலோகமோ என்று கருதும்படி. மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள அலங்கார முகப்புடன் ஜகஜ்ஜோதியாக காட்சியளிக்கிறது மாநாட்டரங்கு. செயல் வீரர்களான தமிழரசுத் தொண்டர்கள் சட்டைகளில் மூவர்ணப் பாட்ஜுகளுடன் அங்கும் இங்கும ஓடி பாடி அலுவல்களை கவனித்துக்கொண்டிருக்கின்றனர்.

தலைவர்கள் ஒருவரையும் மாநாட்டரங்கில் காணவில்லை. எங்கே தலைவர்கள் என்று ஒரு தொண்டரைக் கேட்டேன். விஷயாலோசனைக் கூட்டம் நடைபெறுவதாகவும், காலை 8 மணிக்கு தொடங்கிய கூட்டம் இனனும் (அப்போது இரவு மணி 7) முடிவடையவில்லையென்றும் விஷயம் காரசாரமாக போய்க்கொண்டிருப்பதாகவும் அத்தொண்டர் கூறினார்.

காரசாரமான நடவடிக்கையைத்தானே இன்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று மனதுள் எண்ணிக்கொண்டே மாநாட்டரங்குக்குள் நுழைகிறேன். அங்கு அறிஞர் அண்ணாவும், பாரதியாரும் முதலில் என்னை வரவேற்றார்கள். தம்பி வா என்றார் அண்ணா; வாடா பாண்டியா என்று வரவேற்றார் பாரதி

—தொடரும்.

கலப்பற்ற உயர்ந்த அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்பரேசன்
14 டாம் வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை!

## இடதுசாரிகள் மீது பலத்த கண்டனம்!

(4ம் பக்க தொடர்ச்சி)

களை துன் ,ப்பதற்கு பெரும் முயற்சி நடத்தப்பட்டு வருகிறது

( தமிழ்மொழி உபயோக சட்டவிதிகளை செம்மையாக அமுல் நடத்துவதில் அரசாங்கம் தேவையற்ற காலதாமதம் காட்டி வருகிறது.

(உ) நிறைசேரிச் சுற்றறிக்கைகள் 700-701 ஆகியவற்றை நிறைவேற்றுவதில் கொடுத்த வாக்குறுதிக்கு முரணாக நடந்து தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு வெறுப்பையும், கஷ்டத்தையும் ஏற்டடுத்தியுளது.

### தனிக் குழு

ஆகவே இக்கட்சி இனியும் தொடர்ந்து அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதால் தமிழ் பேசும் மக்களின் நன்மைகளைப் பாதுகாக்க முடியாது என்று உணர்வதால் கட்சிப் பாராளுமன்ற குழுவினரை எதிர்கட்சியில் ஒருதனிக் குழுவாக இயங்தும்படி ஆணை பிடுகின்றது.

தமிழ்பேசும் மக்களின் ஒரே கூட்டு அமைப்பாகவும் கட்டுப்பாடாகவும் இயங்கி இழந்த உரிமைகளை திர்காலத்தில் மீட்பதற்கு கட்சி எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிக்கும் வண்ணம் தமிழ் பேசும் மக்களை இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

### மூன்றுவது தீர்மானம்

சிங்கள இனத்திடமிருந்து நீதிகோரி நிற்கும் தமிழ் பேசும் மக்களில் ஒரு சாரார் உரிமை குறைந்தவர்களாக்கப்பட்டு கோவில்கள், உணவு விடுதிகள் போன்ற பொது இடங்களில் சம உரிமை மறுத்து அவர்களை ஒதுக்கி வைக்கின்ற நிலை இன்று நிலவி வருவதை இலங்கைத் தமிழரசின் 11 வது மாநாடு விசனத்துடன் கவனித்து இந்நிலமையை உடன் மாற்றித் தமது இனத்தின் ஒற்றுமையை வளர்ப்பதற்கு மக்கள் மத்தியில் பிரசாரம் செய்தவன் மூலமும், சட்ட நடவடிக்கை மூலமும் செயலாற்ற வேண்டும் என்று தீர்மானித்திருக்கின்றது.

அதே நேரத்தில் இப்பிரச்சினையில் தமது அரசியல் கோட்பாட்டைப் புகுத்தி ஒன்றுமறியாத மக்களைப் பலாத்காரத்தில் இறங்கச் செய்து தமிழ் மக்கள் மத்தியில் இரத்தக் களறியை ஏற்படுத்த முயன்றுவரும் இடதுசாரி இயக்கங்கள் சிலவற்றினை இம்மாநாடு பலமாகக் சண்டிப்பதுடன் பலாத்காரம் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாதென உணர்ந்து அன்பு வழியிலும் சட்ட வழியிலும் இதனைத் தீர்க்க ஒத்துழைக்குமாறு எல்லாத் தமிழ் மக்களையும் இம்மாநாடு அன்புடன் அழைக்கிறது. இன்றுள்ள சட்டம் இப்பிரச்சினைக்குப் பரிகாரம் காணப் போதியதாக இல்லையென்று தோன்றுவதால் இச்சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மாநாடு தீர்மானிக்கிறது.

### 4-வது தீர்மானம்

பேராதனையில் தேசிய மொழிகள் இரண்டிலும் கல்வியூட்டும் சேசியப் பல்கலைக் கழகம் ஒன்றும், தலைநகராகிய கொழும்பில் தேசிய மொழிகள் இரண்டையும் பேசுவோருக்குச் சேவை செய்யும் பல்கலைக் கழகம் ஒன்றும், சிங்களம் பேசும் மக்களின் கலாச்சாரக் கல்வித் தேவைகளை நிறைவேற்றும் வித்தியோதய, வித்தியாலங்கார என்னும் இரு பல்கலைக் கழகங்களும் இருப்பதால் தமிழ் பேசும் மக்களின் மொழி கலாசாரம் என்பனவற்றைப் பாதுகாத்துப் பேணி வளர்ப்பதற்கும் அவர்களுடைய கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், திருமலையில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவுவது இன்றியமையாததெனவும் இப் 11வது மாநில மாநாடு பிரகடனம் செய்து, இந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவ உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென வற்புறுத்துகிறது.

### 5-வது தீர்மானம்

தமிழில் சிறந்த இலக்கியங்களை ஆக்குவதற்கு வேண்டிய ஊக்கத்தையும் ஆக்கத்தையும் கொடுப்பதற்கு கல்வி கலாசார அமைச்சு முற்று முழுதாகத் தவறியமையால் இதற்காக ஒரு தேசிய நிறுவகத்தை நிறுவ வேண்டு மெனஇந்த மாநில மாநாடு முடிவு செய்து அதனை நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு செயற் குழுவைப் பணிக்கிறது.

---

## உங்கள் உரிமை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்தான் பிரபல்யம் வாய்ந்தவர்கள் என்பதை இங்கு எடுத்துக்கூறுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எதற்கும் நாம், முதலில் அடங்கியும் நடக்கத்தான் வேண்டும். அடங்கத் தெரிந்தால்தான் அடக்கவும் முடியும். இன்று நாம் போராடும் உரிமையின் முடிவே உறவுதான். இதனைத்தான் முடிவில் எந்த ஆட்சியாளர்களும் உணரவேண்டும்.

தமிழர்களுக்குள் ளேயே உயர்வு, தாழ்வு இருக்கும் வரை நாம் உரிமைகளைப் பெறமுடியாது. எமது உரிமைகளைத் தர வேறு யாராவது மறுக்கிறார்கள் என்று நாம் கூறவே முடியாது. எமக்குள்ளே உள்ள பிளவை முதலில் நீக்கவேண்டும். இதனைக் கண்டுபிடித்தவர் மகாத்மா காந்தி அடிகள்தான்: கடமைக்காக இல்லாவிடினும், உரிமை என்ற உறவுக்காவது தமிழர்கள் தீண்டாமையை ஒழிக்கவேண்டும்.

### நான் ஒரு தமிழ்ப் பாதிரி

நான் கடலுக்கு அப்பால் ஒரு தீவிரமான ஒரு அரசியல்வாதி. ஆனால் இங்கும் எட்டுத் திக்கும் ஒரு கலாச்சாரவாதி. தமிழினத்தின் உரிமையைக் காக்க எங்கும் செல்லத் தயாராக இருக்கும் ஒரு காவல்வாதி. என்னை ஒரு தமிழ்ப் பாதிரியாக நினைத்தே டட்லி சேனநாயக்கா என்னை இங்கு வர அனுமதித்தார்கள்.

தமிழக மாநில போராட்டம் தொடங்க இன்னமும் சில மாதங்களே இருக்கின்றன. அது நிச்சயம் வெற்றியையே கொடுக்கும். உங்களுக்கு இங்கிருந்து என்னால் எதுவுமே செய்ய முடியாது. உங்கள் எந்தப் போராட்டத்துக்கும், கடலுக்கு அப்பால் இருந்து நான் உதவி செய்வேன் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன்.

ஒரே நாட்டு மக்கள் என்பதற்காக சிங்கள மக்களுடன் ஒன்றுபட்டு வாழுங்கள்.

தமிழ், தமிழர் வாழும் இடமெல்லாம் முதலிடம் வகிக்க ஒன்று படுங்கள்.

## புதிய 'பாரதம்'...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்குவதற்கு களம் அமைந்துவிட்டது. 'புதிய பாரதப்போர்' ஆரம்பமாகப்போகிறது.

பாரதக்கதைதான் உனக்குத் தெரியுமே! ஆரம்பத்தில் துரியோதனனிடம் இராச்சியத்தில் பாதிகேட்ட தர்மர், அமைதியாகப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்காக எவ்வளவோ படி இறங்கி வந்து இறுதியில் ஐந்து வீடுகளாவது தரும்படி கேட்டார். அழிவுக்கு முன் அகந்தை தலைவிரித்தாடுவது இயல்பல்லவா? தர்மரின் குறைந்த பட்சக்கோரிக்கையையும் நிராகரித்தான் துரியோதனன். இதன் முடிவு தானே பாரதக்கதை! பொறுமை பொங்கி எழுந்தால், ஆதிக்கக்காரர்கள் அழிந்துபடுவது உறுதி. இது தான் பாரதம்!

நண்பா, இங்கு நடப்பதும் பாரதம்தான். துரியோதனன் அண்ணன்: பஞ்சபாண்டவர்கள் தம்பிகள்! இங்கும் சிங்களவர்களும் தமிழர்களும் அண்ணன் தம்பிகள் தானே.

துரியோதனனிடம் அரைவாசி இராச்சியம் கேட்ட தர்மர் தனது குறைந்தபட்சக் கோரிக்கையாக ஐந்து வீடுகள் கேட்டார். இங்கும் தமிழ்பகுதிகளுக்கு சமஷ்டிக் குட்பட்ட சுயாதீனம் கோரிய தமிழரசுக்கட்சி, தனது குறைந்த பட்சக் கோரிக்கையாக மாவட்டசபையை முன் வைத்தது, எப்படி துரியோதனன் ஐந்த வீடு ஆவது தரச் சம்மதிக்கவில்லையோ அதே போன்று மாவட்ட சபை வழங்குவதற்கு கூட சிங்கள ஏகாதிபத்தியம் மறுத்து விட்டது!

நண்பா, ஐந்து வீடுகள் கூட மறுக்கப்பட்டபின்னர் இனிவேறுவழியில்லையென்று தர்மர்யுத்த களத்தில் குதித்ததுபோல நமது தர்மரான தந்தை செல்வநாயகமும் அறப்போர்க்களத்தில் குதித்துவிட்டார்! இனிப் 'பாரதப் போர்' ஆரம்பமாக வேண்டியது தான் பாக்கி!

தமிழரசுத் தந்தை ஒரு தமிழ் தினசரிக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியது போல கரடுமுரடான பாதைக்கு உன்னைத் தயார் படுத்திக் கொண்டு அழைப்பு வரும்போது 'புதியபாரதம்' எழுத இப்பொழுதே தயாராகி விடு!

உன்,
அன்புத்தோழன்
'கோவை'

---

## இரத்தம், வியர்வை, கண்ணீர்சிந்துவதற்கு தயாராவீர்...

(3ம் பக்கத் தொடர்)

உண்டுபேராதனையில் தேசிய சர்வகலாசாலை இருக்கிறது. கொழும்பு நகரில் ஒரு சர்வகலாசாலை இருக்கிறது. இதை விட சிங்கள மக்களுக்கு 2 சர்வகலாசாலைகள் உண்டு தமிழ் மக்களுக்கு ஒரு பல்கலைக் சழகம் கூடக் கிடையாது.

திருமலையில் பல்கலைக்கழகம் நிறுவித் தருவதாக பிரதமர் பல தடவை கூறியிருந்தார். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. இதிலும் ஏமாற்றம் தான் கிடைத்தது.

பிரதமர் டட்லி சேனநாயக்கா இன்னும் ஆட்சிசெலுத்தப்போகும் ஒரு வருடகாலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு எதையும் செய்யப் போவதில்லை என்பது திட்டவட்டமாகத் தெரிகிறது. இந்த நிலையில் இன்னும் நாம் அரசாங்கத்திற்கு ஆதரவளித்துக் கொண்டிருப்பதில் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. இதனால்தான் அரசாங்கத்திலிருந்து முற்றாக வெளியேறி உரிமைக்காக போராடுவது என்று தீர்மானித்துள்ளோம்.

இந்த நாட்டில் ஒற்றையாட்சி இருக்கும்வரை எந்த ஆட்சி ஏற்பட்டாலும் அது சிங்கள ஆட்சியாகவே இருக்கும். இதனால் தமிழ் பேசும் மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை:

சமஷ்டி அரசியல் அமைப்பே சரித்திர, விஞ்ஞான அரசியல் ரீதியாக சிறுபான்மையினருக்கு நன்மையளிக்குமென்பதைத் திரு. செல்வநாயகம் 49-ம் ஆண்டே கூறியிருந்தார்.

இந்நாட்டில் எந்தச் சிங்களக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பெரும்பான்மை பலம் பெற்றிருக்குமாதலால் தமது கோரிக்கை நிறைவேற்றக்கூடிய நிலையில் இருக்காது. ஆதலால் ஒரே ஒரு வழி போராட்டம் தான். போராட்டம் மூலம்தான் நமது உரிமைகளை லட்சியத்தைப்பெற முடியும்.

எந்த இடத்தில் போராட்டத்தை விட்டோமா மீண்டும் அதே இடத்திலிருந்து தொடங்குவோம். வீட்டுக்கொரு வாலிபர்கள் போராட்டத்தில் குதிக்க முன்வாருங்கள்.

இன்று முக்கியமான முடிவிலிருந்து முற்றாக வெளியேறி எதிர்க்கட்சியோடு இருக்கத் தீர்மானித்து விட்டோம்.

கூட்டாட்சிக் கட்சிகளோடு இரண்டறக கலக்கமாட்டோம். எதிர்க்கட்சியில் தனி இயக்கமாக தனிக் கொறடாவின் கீழ் இயங்குவோம்.

எதிர்காலத்தில் நீங்கள் பெரும் தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் அதற்கு தயாராகுங்கள். எதிர்கால அரசியல் பற்றி தீர்மானிக்கும்வரை எதிர்க் கட்சியில் இருந்து உரிமைக்காக பாடு படுவோம். இன்று நாம் எடுத்த முடிவு சரியென்பதை நீங்கள் இங்கு வங்கக் கடலைப் போல் திரண்டிருக்கும் காட்சி எடுத்துக் கூறுகிறது.

இந்த நாட்டில் இனிமேலும் நாம் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ முடியாது. நாம் அரசாங்க சேவையை நம்பி வாழ முடியாது. சிங்கள மக்களுக்கு இந்நாட்டில் எப்படி உரிமை இருக்கிறதோ அதேபோல் நமக்கும் இருக்கவேண்டும் அந்த உரிமையைப் பெறுவதற்காக நாம் போராடித் தான் திரவேண்டும்.

(திரு. [illegible] ஆற்றிய உரை அடுத்த வாரம் வெளிவரும்.)

---

### அடுத்த இதழில்

மாநாட்டுச் செய்திகள் விசேட படங்கள்
சிலம்புச் செல்வர் ம. பொ. சி. சிறப்புப் பேட்டி!
டெயிலி நியூஸ் ஏட்டின்போக்கிரித்தனம்
மற்றும் பல சூடான செய்திகளுடன் கவிஞர் காசி ஆனந்தனின் அண்ணா காவியமும்! அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து இடம் பெறும். —ஆ-ர்.

## 'சிங்களம் மட்டும் கொள்கையை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)


தமிழரசுக்கட்சி, வடக்கு கிழக்கில், தமிழுக்கு விசேட உரிமையையும், நாடு பூராவிலும் சம அந்தஸ்தையும் நிலைநாட்டி விட்டது. வடக்கே பெயர்ப்பலகைகள் கூட தமிழில் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. சிங்களம், ஆங்கிலத்துக்கு மூன்றுவது இடம் கூடத் தரப்படவில்லை. தமிழரசுக் கட்சியின் நெருக்குதலுக்கு யூ.என்.பி.பணிந்துவிட்டது.


## புதுவருட வாழ்த்துக்கள்.

மில்க் வைற் சோப் அன்பர்கள், ஆதரவாளர்கள், பாவிப்பாளர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘தமிழினம் தன்மானத்துடன் வாழுவதற்கு சமஷ்டி ஆட்சி ஏற்பட்டே தீரவேண்டும்’

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் நாடுகளில் அவ்வினங்களுக்கிடையில் மோதல் ஏற்படுவது இயற்கை. தொகையில்கூடியஇனம்குறைந்த இனத்தை விழுங்க முற்பட்டால் அச்சிறியஇனம் தன்னை காத்துக் கொள்ளத் தவறினுல் அழிந்தொழிய வேண்டியநிலையேற்படும். பலநூற்ருண்டுகளாக பெரும்பான்மை ஆங்கில மக்களுடைய ஆட்சியைஏற்று வாழ்ந்த ஸ்கொச், உவெல்ஸ், மக்கள்கூட சமீப காலத்தில் சுயாட்சிகோரி இயக்கங்களை ஆரம்பித்து அவை வலுப்பெற்றுவருவதை நாம்காண்கிறோம். பல இனங்கள் வாழும் நாட்டில் இனப்பூசலைத் தடுக்க வேண்டுமாயின் ஒவ்வொரு இனத்திற்கும் சுயாதீனம் வழங்கக்கூடிய ஒருஅரசியல் அமைப்பு ஏற்பட வேண்டும்.

பிரதேசரீதியாக பிரிக்கக் கூடியவகையில் சிறுபான்மை இனம் வாழுமாயின் அப்பிரதேசங்களுக்கு சுயாட்சி வழங்கக்கூடிய சமஷ்டி அமைப்பின் மூலமே உலகிலுள்ள மற்ற நாடுகளில் இவ்வினப் பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது. இந்த அரசியல் பரிகாரம் கையாளப்படாத நாடுகளில் சிறுபான்மையினம் பெரும்பான்மையினத்திஞல் விழுங்கப்பட்டு அழியும். அல்லது அந்நாடு பிளவுபடும். சமீபத்தில்கூட செக்கோசிலாவாக்கிய நாட்டில் சமஷ்டிஅரசியல் அமைப்பை ஏற்று அங்கு வாழும் இரு இனங்களும் சுதந்திரமாகவும் ஒற்றுமையாகவும் வாழ வழி வகுத்திருக்கிருர்கள். இந்த சந்தர்ப்பத்தில் இருபது ஆண்டுகளுக்குமுன் எமது கட்சியின் ஆரம்ப மாநாட்டில் தந்தை செல்வநாயகம் ஆற்றிய தலைமைப் பேருரையிலிருந்து ஒருகருத்தை நினைவு படுத்த விரும்புகிறேன்.

‘நாம் கோருவதும் இது தான். ஒரு சுயாட்சி தமிழ் மாகாணமும் சுயாட்சி சிங்கள மாகாணமும் அமைத்து இரண்டிற்கும் பொதுவானதோர் மத்திய அரசாங்கமுள்ள சமஷ்டி அரசியல் இலங்கையில் ஏற்பட வேண்டும். தமிழ் பேசும் தேசிய இனம் பெரியதேசிய இனத்தால் விழுங்கப்பட்டு அழியாதிருக்கவேண்டுமாஞல் இவ்விரு சமஷ்டி ஏற்படுவது அவசியமாயிருக்கிறது.

……………………

சமஷ்டி ஆட்சியில் ஒருவரும் நஷ்டமடையப்போவதில்லை. நிச்சயமாக சிங்கள மக்கள் நஷ்டமடையமாட்டார்கள். ஏனென்ருல் இது பெரும்பான்மையோருடைய பிரதிநிதித்துவத்தை குறைத்து சிறுபான்மையோருக்கு கூடுதலான பிரதிநிதித்துவம் அளிக்கும் திட்டத்தை போன்றதன்று. ஆதலால் சமஷ்டி அரசியல் எல்லோரும் விரும்ப வேண்டிய ஒரு இலட்சியமாகும்.

1949 ம் ஆண்டு தந்தை செல்வநாயகம் அவர்கள் கூறிய வார்த்தைகள் சொல்லுக்குச் சொல் இன்றும் சரியாக இருப்பதை நாம் காணலாம். இந்த ஒற்றை ஆட்சியின் கீழ் நமது உரிமைகள் பாதிக்கப்படுவது மாத்திரமன்றி பொருளாதாரத் துறையிலும் கல்வித் துறையிலும் கலாச்சாரத் துறையிலும் நாம் பின் தள்ளப்பட்டு வருகின்ருேம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

## பொருளாதார ரீதியில் புறக்கணிப்பு

வெளிநாட்டு உதவியுடனும் உலக வங்கி போன்ற சர்வ தேச நிறுவனங்களின் உதவியுடனும் மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் சமீபகாலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் ஒன்றுதானும் வடக்கு கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்யவோ 'தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை தரக்கூடிய வகையாகவோ அமையவில்லை.

நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கிக் கொண்டிருப்பது கிழக்கு மாகாணம். உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் பல கோடி ரூபாவைச் செலவு செய்யும் இந்த அரசாங்கம் கிழக்கு மாகாணப் போக்குவரத்து வசதிகளையும் அபிவிருத்தி செய்து தமிழ் பேசும் விவசாயிகள் இவ்வுணவுற்பத்தித் திட்டத்தில் பூரண வசதியோடு பங்குபெற வாய்ப்பு அளிக்கத் தவறிவிட்டது. எமது பிரதேசங்களின் நீர்ப்பாசன திட்டங்கள் போதிய கவனிப்பின்றிக் கிடக்கின்றன. தமிழ் பேசும் மக்கள் குடியேற்றப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் தானும் அரை குறையாக அஞதரவாகக் கிடக்கின்றன. வடக்கே காங்கேசன் துறைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுமென்று ஆண்டுதோறும் அளிக்கப்பட்டுவரும் உறுதிமொழி ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கின்றது. தென்னிலங்கையில் அரசாங்கம் பல கைத்தொழிற்சாலைகளை ஆரம்பித்ததாயினும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒன்று தானும் நிறுவப்படவில்லை.

பொருளாதாரத் துறையில் நான்மேலே குறிப்பிட்ட அதே புறக்கணிப்புக் கல்வித் துறையில் இன்னும் மோசமாகக் கையாளப்பட்டு வருகிறது. தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின் முந்திய அரசாங்கத்திஞல் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் நீக்கப்படுமென்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆஞல் பௌத்த சிங்கள பெரும்பான்மையோரின் விருப்பத்திற்கு மாருக எதையும் செய்ய அஞ்சும் அரசாங்கம் சிறுபான்மை மக்களின் நம்பிக்கையில் மண்ணைப் போட்டு விட்டது என்றே கூற வேண்டும்.

## மாற்றுந்தாய் மனப்பான்மை

தமிழ் பேசும் மக்களின் பல்கலைக் கழகக் கோரிக்கை தட்டிக் கழிக்கப்பட்டதை ஏற்கெனவே குறிப்பிட்டேன், அதே மனப்பான்மை பாடசாலைக் கட்டிடங்கள் விஞ்ஞான ஆய்வு கூடங்கள், தொழில் நுட்பக்கல்வி வசதிகள், நுண்கலைக்கல்வி ஆகிய சகல துறைகளிலும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றதை நாம் காண்கின்ருேம். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓர் கனிஷ்ட பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமென்ற உயர் கல்விச் சபையின் சிபார்சு கல்வி அமைச்சிஞல் புறக்கணிக்கப்பட்டிருப்பதையும் அங்கு ஓர் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி நிறுவுவதாக அளித்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பதையும் நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். தென்னிலங்கையில் வாழ்கின்ற தமிழ்ப் பிள்ளைகளின் கல்விவசதிகள் யாற்ருந் தாய் மனப்பான்மையோடு உதாசீனம் செய்யப்பட்டுவருகின்றது.

தமிழ் கலாச்சார வளர்ச்சிக்கு அத்தியாவசியம் தேவையான வாஞெலி நிலையத்திற்குபரந்தனில்போடப்பட்ட அத்திவாரக்கல் இன்னும் கல்லாகவே கிடக்கின்றது. கருங்கக் கூறின் அரசாங்கத்திடம் பாகுபாடற்ற ஒரு அபிவிருத்தித் திட்டம் இல்லையென்பதுதான் உண்மை. இவையெல்லாம் இன்றைய ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் நாம் எப்படியெல்லாம் உரிமைகளையும் இழந்து அழிவுப் பாதையில் தள்ளப்படுகிருேம் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. [illegible] திய ஆகவேண்டும். இந்த அரசியல் அமைப்பை மாற்றியே தீரவேண்டும். எம்மை நாம் ஆளக்கூடிய நிலையேற்பட்டாலன்றி எமக்கு விமோசனம்இல்லை. இந்த இலக்கையடைவதற்கு வழியென்ன என்பதை ஆராய்ந்து தமிழினத்திற்குக் காட்ட வேண்டியது இம்மாநாட்டின் கடமையாகும்.

## நாம் பெற்ற நன்மைகள்

எமது கட்சியின் சரித்திரத்தில் இனத்தின் விடுதலையைக் காண்பதற்கு பல்வேறு வழிகளைக் கையாண்டோம். ஆரம்பகாலம் தொடக்கம் எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்தையெதிர்த்து வாதாடியும் போராடியும் வந்த நாம் 1965ம் ஆண்டு தேர்தலின் பின்பு அரசாங்கத்தில் ஓர் அங்கமாக சேர்ந்தோம். முன்பு கையாண்ட போராட்ட வழிகளிஞல சிங்களத் திணிப்பு போன்ற சில ஆபத்துகளை ஓரளவிற்கு தடுத்தோம். கடந்த நாலு ஆண்டுகளாக நாம் கையாண்ட ஒத்துழைப்பு வழியிஞல் நாம் எதிர்பார்த்த நன்மைகள் அனைத்தையும் பெருவிட்டாலும் ஒருசில உரிமைகளை நிலைநாட்டியிருக்கின்ருேம் என்பதை இங்கு குறிப்பிடாமல் விடமுடியாது.

## வடக்கு கிழக்கில சம அந்தஸ்து

சென்ற மாதம் வெளியிடப்பட்ட உத்தியோக மொழி பற்றிய திறைசேரிச் சுற்றறிக்கை, சட்டத்தின் கீழ் இன்றுள்ள உத்தியோக மொழிக் கொள்கையை தெளிவுபடுத்துகின்றது. 1956ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிங்கலம் மாத்திரம் சட்டத்தில் இருந்து இன்றைய கொள்கை எவ்வளவோ மாற்றங்களை கண்டுவிட்டது என்பதை எவராலும் மறுக்கமுடியாது. இத்திறைசேரிச் சுற்றறிக்கையின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் சகல நிர்வாக வேலைகளுக்கும் தமிழும் கட்டாயமாக உபயோகிக்கப்பட வேண்டும். இம்மாகாணங்களில் அரசாங்க அலுவலகங்களில் வைக்கப்படும் பதிவுகள் குறிப்புக்கள் அனைத்தும் தமிழிலும் வைக்கப்படவேண்டும். சுருங்கக்கூறுவதாக இருந்தால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களத்திற்கும், தமிழுக்கும் ஒரு சமமான அந்தஸ்து சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. நாடு முழுவதிலும் தமிழ்பேசும் மக்களோடு அரசாங்கம் நடத்தும் கடிதப் போக்குவரத்து தமிழிலும் நடத்தப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது. அரசாங்க பிரசுரங்கள், விளம்பரங்கள், பத்திரங்கள், பெயர்ப்பலகைகள் எல்லாம் நாடு முழுவதும் தமிழிலும் இடம்பெறவேண்டுமென்று இன்று சட்டம் கூறுகின்றது. நமது கோரிக்கையான சிங்களத்திற்கும் தமிழுக்கும் நாடு முழுதும் சம அந்தஸ்தென்பது இன்னும் கிடைக்கவில்லை என்ருலும் தமிழினுடைய அந்தஸ்து நான் மேலே குறிப்பிட்ட விதத்தில் பெருமளவு முன்னேறியிருக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை.

நாம் எதிர்பார்த்தது போல் மாவட்ட சபைகளையும் நிறுவுவதிலும் வெற்றி கண்டிருப்போமாஞல் தமிழினத்தின் நிலை எவ்வளவோ உயர்ந்திருக்கும். இதை எதிர்க்கட்சிகளும், தமிழ்க் காங்கிரசும் நிறைவேற்ருது தடுத்துவிட்டாலும் நாம் எமது இலக்கை நோக்கி இடையருது முயன்றுகொண்டேயிருக்கவேண்டும்.

இந்த சிறிய அளவிலாவது எமது உரிமையைநிலைநாட்டுவதிலும், எமது பிரதேசத்தை பாதுகாப்பதிலும், எமது இனத்தை பாதிக்கும் பல ஆபத்தான சட்டங்களை விலக்குவதிலும், கடந்த நான்கு ஆண்டுகளிலும் நாம் வெற்றி கண்டோம். ஆஞல் தேசிய அரசாங்கத்தை அமைத்த ஆரம்பகாலத்தில் தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளை மதித்து நடந்து வந்த அரசாங்கம் சமீப காலத்தில் அவற்றை மோசமாக புறக்கணிக்கத் தலைப்பட்டுவிட்டது.

## புனித நகர் பிரச்சினை

இந்நாட்டின் இந்து மக்களின் நீண்ட நாட்களின் கோரிக்கை கோணேஸ்வர ஆலய பகுதி புனித நகராக பிரகடனம் செய்யப்பட வேண்டுமென்பது; அதை நிறைவேற்ற தமிழ் அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் சில நடவடிக்கைகள் எடுத்தார். புத்தகுரு ஒருவர் ஆட்சேபித்தவுடன் பிரதமர் தலையிட்டு அவற்றை நிறுத்திஞர்; அதஞல் திரு. திருச்செல்வம் அமைச்சரவையில் இருந்தும், நமது கட்சி அரசாங்கக்கட்சிப் பாராளுமன்றக் குழுவிலிருந்தும் வெளியேறவேண்டியநிலையேற்பட்டது. நான் முன்பு குறிப்பிட்ட பொரு

(11ம் பக்கம் பார்க்க)

# 21 ஆண்டுகால ஒற்றையாட்சி உணர்த்தும் உண்மை இது!

# தமிழரசு மாநாட்டில் இராசமாணிக்கம் முழக்கம்!

# தீண்டாமை பேயை ஒழித்துக்கட்டுவது முதற்கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கடிதத்துக்கு, மொழிபெயர்ப்பல்ல தமிழிலே மறுமொழியனுப்பவேண்டும்

தமிழ் பேசும் மக்களுடன் அரசாங்கம் கடிதத் தொடர்பு கொள்ளும் போது சிங்களத்திலிருப்பதுடன் தமிழ் மொழியிலுமிருக்க வேண்டும் என திறைசேரிச் சுற்றறிக்கை இல 760திட்டவட்டமாகக் கூறுகிறது. ஆனால் நீங்களும், உங்கள் அரசாங்கமும் இச்சுற்றறிக்கைக்கு முரணாக தமிழ்க்கடிதத்துக்கு தமிழில் மறுமொழி அனுப்பாது தமிழ் மொழிபெயர்ப்பு அனுப்புகிறீர்கள். இத்தவறை இனிமேலும் விடாது சுற்றறிக்கையை சீராக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுங்கள்.

— இவ்வாறு பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதம அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் வற்புறுத்தியுள்ளார்.

திரு. இரத்தினத்துக்கு அண்மையில் பிரதமர் எழுதிய கடிதமொன்று சிங்களத்தில் எழுதப்பட்டு, தமிழ் மொழிபெயர்ப்புடன் அனுப்பப்பட்டிருந்தது. இதை ஆட்சேபித்து பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தான் திரு. இரத்தினம் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

திரு. இரத்தினத்தின்கடித விபரம் வருமாறு:

'உங்களுடைய 31. 3. 69 திகதிச் சிங்களக் கடிதமும் தமிழ் மொழி பெயர்ப்பும் கிடைத்தன. உங்களுக்குத் 'தமிழில் எழுதுதற்கு எனக்கு முழு உரிமையும் உண்டு என நீங்கள் குறிப்பிட்டதற்கு' என்நன்றி.

'ஆனால் நான் தொடர்ந்தும் உங்களுக்குச் சிங்களத்தில் எழுதி அதன் மொழி பெயர்ப்புடன் அனுப்புவேன்' எனும் உங்கள் கூற்றுஎனக்கு மிகுந்த கவலையைக் கொடுக்கின்றது. அரசாங்கத்திடமிருந்து தமிழிலும் மறுமொழியைப் பெறுதற்குத் தமிழ் மக்களுக்கும் எனக்கும் உரிமையுண்டு என்பதை உங்களுடைய இந்தக் கூற்று மறுக்கின்றது.

'தமிழ்க் கடிதங்களுக்குச் சிங்களத்தில் மறுமொழியும் தமிழ்மொழி பெயர்ப்பும் அனுப்பவேண்டுமென திருமதி பண்டாரநநாயகா அரசாங்கம் செய்த ஒழுங்கை மாற்றித் தமிழ்க் கடிதங்களுக்குச் சிங்களத்திலும் தமிழிலும் மறுமொழி அனுப்பச் செய்வதற்காகவே 28.2.69 இல் திறைசேரிச் சுற்றறிக்கை என். 760 வெளியிடப்பட்டது. இந்தச் சுற்றறிக்கை தமிழரசுக்கட்சி உங்களுடன் இரண்டாண்டுகளாகத் தொடர்ந்து நடத்திய பேச்சுக்களின் பயனாக உங்கள் பணிப்புக்கு இசைய வெளியிடப் பட்டது.

'கடிதப் போக்கு வரத்து அரசகரும மொழியாகிய சிங்களத்தில் இருப்பதுடன் தமிழ் மொழியிலும் இருத்தல் வேண்டும்'. எனவே, இதற்கேற்ப நீங்கள் எனக்கு அனுப்பும் மறுமொழி தமிழிலும் இருத்தல்வேண்டும்நீங்கள் மறதியாலோ, முன்னை வழக்கத்தாலோ இந்தச் சுற்றறிக்கைக்கு முரணாக எனக்குத் தமிழ்மொழிபெயர்ப்பை அனுப்பிவிட்டீர்கள்! நீங்கள் மட்டுமன்று, இச்சுற்றறிக்கையினை நடைமுறைப்படுத்



## திறைசேரி சுற்றறிக்கை இதை தெளிவுபடுத்துகிறது!

### பிரதமருக்கு இரத்தினம் விளக்கம்!

28..8.67 இல் பாராளுமன்றத்தில் நான் நிகழ்த்திய உரையின் உங்களுடல் நான் இவ்விடயம் பற்றி உரையாடியதையும் அதன் பெறுபேற்றையும் விரிவாக எடுத்து விளக்கியுள்ளேன்.

'இச்சுற்றறிக்கையின் 3(3. 02) வாசகத்தின்படி தவேண்டிய ஆட்சி மொழித் திணைக்களத் தலைவருமே இச் சுற்றறிக்கையைப் புறக்கணித்து எனக்கு தமிழ் மொழி பெயர்ப்பை அனுப்பியுளர்.

அரசாங்கத் தாபனங்கள் பல இவ்வாறே செய்வதாக மக்கள் முறையிடத் தொடங்கியுளர்.

'இச்சூழ்நிலையில், உங்கள் பணிப்பினுல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் 3(3. 02) எனும் வாசகத்தை நன்கு நடைமுறைப்படுத்துதற்கு வழிகாட்டி வழிப்படுத்த வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

## புத்துயிர் பெற்ற தமிழகத்தை படைப்போம் வாரீர்!

(10-ப்பக்கத் தொடர்ச்சி)

ளாதார, கல்வி கலாச்சார துறைகளில் அரசாங்கம் எம்மைப்புறக்கணித்து எடுக்கும் நடவடிக்கைகளிலும் இதே மனப்பான்மையே மேலோங்கி நிற்பதைக் காண்கிறோம்.

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் அடைந்த வெற்றியை ஒரு பூச்சாண்டியாகக் காட்டி சிங்கள மக்கள் மத்தியில் தீவிர வகுப்பு வெறியை தூண்டும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்ப்பட்டங்களை குறைத்தும் தமிழ்க் கலாச்சார வளர்ச்சியை இன்னும் பல வழிகளில் நசுக்கியும், தமிழினத்தை அழிக்க திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எந்த கட்சி அரசாங்கத்தில் இருந்தாலும் இதே போக்கும் இதே நிலையுமே நிலவுவதை நாம் கடந்த இருபத்தொரு ஆண்டுகளாக கண்டுகொண்டு வருகின்றோம் அதற்கு காரணம் இன்றைய அரசியல் அமைப்பில் ஆட்சி பீடத்தில் அமரும் எந்த அரசாங்கமும் பெரும்பான்மை சிங்கள மக்களுடைய அரசாங்கமாகவே இருக்கும். அந்நிலையை மாற்ற நாம் தீவிரமாக போராட வேண்டிய கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்றே நான் கருதுகிறேன்.

இந்த அரசாங்கம் எமக்களித்த வாக்குறுதிகளை இனி நிறைவேற்றமாட்டாது என்பது நிச்சயமென்று எனது உரையின் ஆரம்ப கட்டத்தில் நான் குறிப்பிட்டு • இருந்தேன். இந்த சூழ்நிலையில் நாம் தொடர்ந்து இவ்வரசாங்கத்தை ஆதரிப்பதா, அல்லது கடந்த காலத்தில்இயங்கியதுபோல எதிர்ப்பியக்கமாக மீண்டும் மாறுவதா என்பதை எமது அரசியல் மாநாடு தான் தீர்மானிக்கவேண்டும்.

தனது உரிமைக்காக போராடும் எந்த இனமும் தமக்குள் வேற்றுமைகளை களைந்து ஒற்றுமைப்பட வேண்டியது அவசியம். பிரதேசம், மதம், சாதி ஆகிய வற்றையிட்டு தமிழ்பேசும் மக்கள் மத்தியில் உள்ள வேற்றுமைகளை களைந்து இனத்தை ஒன்றுபடுத்துவது எமது கட்சியின் அடிப்படைக் கொள்கையாகும். பெரும்பான்மையினத்திடமிருந்து நீதி கோரியிருக்கும் நாம் எமது சகோதரர்களில் ஒதி பகுதியினரைச்சாதியின் பெயரால் ஒதுக்கிவைத்து அவர்களுக்கு நீதி வழங்க மறுப்பதாயின் நாம் எமது உரிமையை ஒருபோதும பெறமுடியாது. நீதி கோருபவன் தான் நீதிவழங்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

தீண்டாமையென்றநோய் இன்று தமிழினத்தை மிகவும் பலவீனப்படுத்திக் கொண்டு இருக்கிறது. இந்த பலவீனத்தை பயன்படுத்தி சில தீய சக்திகள் தமிழ் மக்களிடையே புகுந்து பலாத்காரத்தை தூண்டி இரத்தக் களரியை ஏற்படுத்த முனைந்து நிற்கின்றன. தீண்டாமையின் கோரப்பிடியிலிருந்து பெருமளவில் தப்பி நிற்கின்றகிழக்கு மாகாணத்திலிருந்து வருபவன் என்ற முறையில் வடக்கு மாகாண மக்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். எமது ஒற்றுமையை குலைக்கின்ற இந்த தீண்டாமையை களைந்து எல்லா பொதுதாபனங்களிலும், உணவு விடுதிகள், ஆலயங்கள் ஆகியவற்றிலும் தமிழ் மக்கள் எல்லோரும் சமமாக நிற்கக்கூடிய நிலையை அதிவிரைவில் ஏற்படுத்தி தமிழினத்தை ஒற்றுமைப் படுத்தி மீண்டும் உரிமைப் பாதையில் செல்லக்கூடிய இனமாக பக்குவப்படுத்துமாறு வேண்டுகிறேன்.

### கஷ்டம் மிகுந்த எதிர்காலம்

எனது உரையை முடிக்குமுன் தமிழ்ப்பேசும் மக்கள் அனைவருக்கும் நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விருப்புகிறேன். எப்பிரச்சினையை எடுத்தாலும் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று எம்மை கேள்வி கேட்பவர் பலர். ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களும் தலைவர்களும் தமிழினத்தின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்க்க வேண்டியவர்கள் என்ற தவறான மனப்பான்மையை இது காட்டுகிறது. ''நீங்கள் என்ன செய்தீர்கள்'' என்று கேட்கு முன் ''நான் என்ன செய்தேன் என்று'' ஒவ்வொருவரும் தன் மனச்சாட்சியைக் கேட்கவேண்டும். இனத்தின் உரிமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு தமிழ்பேசும் மகனையும், மகளையும் தன் பங்கைச் செய்ய வரும்படி அழைக்கின்றேன். கடந்த காலங்களில் நாம் நடத்திய இயக்கங்களிலும் போராட்டங்களிலும் ஆண்களோடு பெண்களும் ஆயிரமாயிரம் கலந்து கொண்டார்கள். ஆண்களுக்கு மட்டும்தான் அரசியல் என்று கருதாது அண்ணல் காந்தி கூறிய நெறியில் தம் பிள்ளைகளின் விடுதலைக்கு உழைக்க பெண்களையும் பங்கு கொள்ளுமாறு அழைக்கின்றேன்.

கஷ்டம் மிகுந்த காலம் எம்மை எதிர்நோக்கியிருக்கின்றது. இந்த நேரத்தில் நாம் கட்டி வளர்த்த ஒற்றுமையை சிதைய விடாது மேலும் பலப்படுத்தி ''உழவிற்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்ற வகையில் இனத்தை வளப்படுத்தி ஒரு புத்துயிர் பெற்ற தமிழினத்தை காண்போம் வாரீர் என்று உரிமை பெற்ற தமிழகத்தைக் அழைத்து விடைப்பெற்றுக் கொள்கின்றேன்.

''வாழ்க தமிழ்! வெல்க தமிழ் அரசு!''

## எங்கே நீயோ . .

(2 ம் பக்கம் தொடர்ச்சி)

அவன் மனதில் அமைதி நிலவுவதாகஇல்லை. நிர்மலா எங்கே இருக்கிறள் என்ன செய்கிறள் என்று பார்க்க அவன் மனம் துடித்தது.

இதுவரை தெருவாயிலுக்கும் உள்ளுக்குமாக நடந்து கொண்டிருந்தவன இப்போது டிஸ்பென்ஸரி விருந்தை நீட்டுக்கு நடக்கத் தொடங்கினன். ஆனுல் யாரைத் தேடி வந்தானே, அந்த முகத்தை அவனுல் காண முடியவில்லை. எங்கு போயிருப்பாள் என்று சிந்தித்தபடியே அவன் திரும்பவுஞ் சென்று தனக்குரிய இடத்தில் அமர்ந்து கொண்டான்.

வழக்கமாக அவன் ஆசையோடுபடிக்குப் புத்தகத்தை கையில் எடுக்கவே அவனுக்கு அன்று பிடிக்கவில்லை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் எவ்வளவு சீக்கிரத்தில் ஒரு மனிதனின் மனநிலையை மாற்றியமைத்து விடுகிறது என்பதற்கு அன்றைய சம்பவமே சாட்சியாக அமைந்திருந்தது. அன்று புதிய கேஸ் ஒன்று கூட அனுமதிக்கப்படாததால் ரகுவுக்கு சோம்பலாக இருந்தது. கூடவே தூக்கமும் வந்து அவனைப் பழிவாங்கியது. அவனது நினைவு திடீர் என உமா விடஞ் செல்கிறது. உமா இந்நேரம் நன்றுகத் தூங்கிக் கொண்டிருப்பாள். அவளுக்கென்ன சீமான் வீட்டுப் பிள்ளை. இந்த ஏழையை நினைத்துக் கொண்டிருக்க அவளுக்கு எங்கே நேரமிருக்கப் போகிறது......? என்று எண்ணியவனின் உதடுகள் மீண்டும் அந்தப் பழைய பாட்டை மீட்டுக் கொண்டன.

எங்கே நீயோ நானும்
அங்கே உன்னோடு

வாசலில் உன் காலடி ஓசை
கேட்டிருப்பேன்

வந்தவுடன் உன் ஆசை
முகத்தைப்
பார்த்திருப்பேன்


கண்ணில் நீரைக் காணாமல்
கவலை ஏதும் கூறாமல்
என்னை எண்ணி வாழாமல்
உனக்கென நான்
வாழ்வேன்
காலம் வரும்

என் கனவுகள் எல்லாம்
கனிந்து வரும்...'

இந்த அடிகளையே திருப்பித் திருப்பி முணு முணுத்துக் கொண்டவன் காலம் வரும் என் கனவுகள் எல்லாம் கனிந்து வரும்...என்று அடிகளைப் பாடியதும் கண்களில் இருந்து நீர் ஆறாகப் பெருகத் தன்னை மறந்து கண்ணை இறுக மூடிக் கொண்டு தலையைத் தன் நாற்காலியின் பின்புறமாகச் சாய்த்துக் கொண்டு அப்படியே கண்ணயர்ந்து விட்டான். அது டிஸ்பென்ஸரி என்ற நினைவே அவனுக்கு அற்றுப் போய்விட்டது. அவன் மானசீகமாக உமாவோடு இரண்டறக் கலந்து விட்டான். சுவர்க்கத்தை அவன் கண்டதில்லை. ஆயினும் தான் இருப்பது சுவர்க்கம் என்றோர் பிரமை தட்டியது அவனுக்கு. அப்போது 'ராமு' என்ற குரல் கேட்டு அவன் திடுக்கிட்டு விழித்தான். அங்கே அவனுக்குப் பழக்கமான 'மிஸி' வழக்கம் போல அவனைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்துக்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3 வது வெற்றி வாரம்!

செல்லமகால் (கொழும்பு) நீகல் (கம்பளை) நெல்சன் (திருமலை) விலாசினி (தெகிவளை)

ரவிச்சந்திரன், பாரதி, அசோகன், சந்திரபாபு நடிக்கும்

# வாலிப விருந்து

டைரக்ஷன்: முரசொலிமாறன் எம். ஏ.

விரைவில் வருகிறது;

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, எ. வி. எம். ராஜன் நாகேஷ், மனோரமா (நடிக்கும்)

## கலாட்டா கல்யாணம்

7-வது வாரம் கெயிட்டி (கொழும்பு)

நாகேஷ், முத்துராமன் —நடிக்கும்

## அனுபவி ராஜா அனுபவி

---

## விரைவில் எதிர்பாருங்கள்!!
## சிலோன் எண்டடெயின் மென்ட்ஸ் திரைகளில்!

● டி. கே. பகவதி ● ஜெயசங்கர் ● கிருஷ்ணகுமாரி ● நாகேஷ் ● விஜயநிர்மலா ● எஸ். வரலட்சுமி ● நம்பியார் ● முத்துராமன் ● ராகவன் ● ராதாபாய் ● மாலதி மற்றும் பலர் நடித்த

இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# உயிரா? மானமா?

'மக்கள் திலகம்'

★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா ★ ராஜஸ்ரீ ★ ஜோதிலட்சுமி ★ மனோகர் மற்றும் பலர் நடித்த

'எம். ஜி. ஆர். பிக்ஷர்ஸ்'

# அடிமைப் பெண்

---

# 2 வது வாரமாக காட்சியளிக்கிறது!



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) விஜயா (மட்டுநகர்) விஜிதா (அட்டன்)

வெலிங்டன் (யாழ்நகர்) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) மொடேன் (பதுளை) நியூசினிமா (குருநாக்கல்)

எம். ஜி. ஆர்.—ஜெயலலிதா—நாகேஷ் —நடிக்கும்



# சந்திரோதயம்

4 வது வாரம் கெப்பிட்டல் [கொழும்பு]

# பூவும் பொட்டும்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டார் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ: இலக்கத்தில் 1969-வருடம் ஏப்ரல் மாதம் -16ம் திகதி [illegible] பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org